# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 30 வெள்ளிக்கிழமை (14-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:160


# ஜனாதிபதியுடன் கூட்டணி நேற்று மீண்டும் பேச்சு!

## தீர்வுத் திட்ட யோசனைகளை திருத்தியமைக்க வற்புறுத்து

கொழும்பு,ஜூலை14

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டக் குழு ஒன்று நேற்றும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுடன் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தியது.**

**அரசின் உத்தேச தீர்வுத் திட்ட யோசனைகளை தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடியவையாக மாற்றியமைக்குமாறு கூட்டணித் தூதுக்குழு இச்சந்திப்பின்போது ஜனாதிபதியை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதாகத் தெரிகின்றது.**

நேற்றுக் கொழும்பு அலரி மாளிகையில் சுமார் 3 மணிநேரம் நீடித்த இப்பேச்சுக்களில் கூட்டணி சார்பில் அதன் செயலதிபர் ஆர்.சம்பந்தன், சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்த சங்கரி, எம்.பியான மாவை சேனாதிராஜா ஆகியோர் பங்கு கொண்டனர்.

ஆரம்பத்தில் அரசுத் தரப்பில் அமைச்சர்கள் பட்டி வீரக்கோன்,

(12ஆம் பக்கம் பார்க்க)

### தீர்வுத் திட்டப் பிரதி பெருமாளுக்கும்

அரசின் உத்தேசத் தீர்வுத்திட்டத்தின் பிரதி ஒன்று கட்சி என்ற அடிப்படையில் அல்லாமல் தனிப்பட்ட ரீதியில் வடக்கு - கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுக்கும் அரசாங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உத்தேசத் தீர்வுத்திட்டம் குறித்து ஜனாதிபதியுடன் தான் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்த இருப்பதாக வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார். (உ)

### 10 தமிழர் கைது

கொழும்பு,ஜூலை14

கொழும்பு செட்டியார் தெரு மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு தேடுதல் நடத்திய படையினர் 10 தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

## புதிய அரசமைப்பின் இறுதி வடிவை பார்த்த பின்பே ஐ.தே.கவின் முடிவு

கொழும்பு,ஜூலை14

உத்தேசத் தீர்வுத் திட்டம் தொடர்பான அரசின் அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளுக்கு இணங்குவதா அல்லது இல்லையா என்பதை அந்த அரசமைப்பு சீர்திருத்தத்தின் இறுதி வடிவைப் பார்த்தபின்னரே ஐ.தே.க. முடிவு செய்யும்.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளை நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வாசஸ்தலத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இணக்கம் காணவேண்டிய விடயங்கள் குறித்து இணக்கம் தெரிவித்துள்ளோம். ஆனால் உத்தேச அரசமைப்புத் திருத்தங்கள் குறித்து மேலும் பேசவேண்டியுள்ளது.

"எதிர்க்கட்சி என்பதற்காக அரசாங்கத்தின் எல்லா நடவடிக்கைகளையும் எதிர்க்க வேண்டும் என்பதல்ல.

"நான்கு மாதங்களாக அரசுடன் பேச்சு நடத்தியுள்ளோம். அதற்காக சகல விடயங்களிலும் இணக்கம் ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம் அல்ல. மேலும் இணக்கம் காண வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அரசமைப்பு சீர்திருத்தத்தின் இறுதி வடிவைப் பார்த்த பின்னரே அதற்கு இணங்குவதா, இல்லையா என்பதை ஐ.தே.கட்சி முடிவு செய்யும்." - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ)

### 9 லட்சம் சிறுவர் பாதிப்பு

கொழும்பு,ஜூலை14

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் அப்பிரதேசத்தில் 9 லட்சம் சிறுவர், சிறுமியர் தமக்குத் தேவையான கல்வி, உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நா.சிறுவர் நிதியத்தின் (யுனிசெவ்வின்) இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹொலண்ட் கிலணி நேற்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் 'யுனிசெவ்' அலுவலகத்தில் நடந்த ஒரு வைபவத்தில் 'யுனிசெவ்' வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் இப்படித் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் யுத்தத்தில் சிறுவர், சிறுமியர்களை ஈடுபடுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்கவோ அல்லது இல்லை என்று மறுக்கவோ தம்மிடம் எந்த ஆதாரங்களும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## அரசின் தீர்வுத் திட்டம் குறித்து தமிழ்க் கட்சிகள் ஆராய்வு

கொழும்பு,ஜூலை14

அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் குறித்து தமிழ்க் கட்சிகள் நேற்று கொழும்பில் கூடி ஆராய்ந்தன.

ரெலோ பிரமுகர் என்.ஸ்ரீகாந்தா அழைத்துள்ள இந்தக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(சுரேஷ்அணி), புளொட், மலையக மக்கள் முன்னணி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மாவட்ட எம்.பிக்கள் எண்ணிக்கை அடுத்த தேர்தலில் 5 ஆகக் குறைப்பு'

### அம்பாறைக்கு 7 ஆக அதிகரிப்பு

கொழும்பு,ஜூலை14

அடுத்த பொதுத்தேர்தலின் போது அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் எம்.பிக்களின் எண்ணிக்கை 6இலிருந்து 7ஆக அதிகரித்துள்ளது. அதேநேரம் வன்னி மாவட்ட எம்.பிக்களின் எண்ணிக்கை 6இலிருந்து 5 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாவட்டங்கள் தோறும் தெரிவுசெய்யப்படும் எம்.பிக்களின் எண்ணிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,ஜூலை14

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் திருகோணமலையிலிருந்து பயணிகளுடன் இன்று வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இங்கிருந்து பயணிகளை ஏற்றிச் செல்லும்.

பயணச் சீட்டுப் பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கும் 'A' வரிசை இலக்கங்களைப் பெற்ற பின்னரும் பயணம் செய்ய இடமளிக்கப்படாதவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பாஸ்போர்ட் வைத்திருப்போர் ஆகியோருக்கும் இம்முறை

(12ஆம் பக்கம் பார்க்க)

### 20 வருடத்தில் சிங்கள அதிகாரம் முடிந்துவிடுமாம்!

கொழும்பு,ஜூலை14

"அரசாங்கம் தயாரித்துள்ள தீர்வுப் பொதியை நடைமுறைப்படுத்தினால் அடுத்த 20 வருடங்களில் நாட்டில் சிங்கள அதிகாரம் முடிவுக்கு வந்துவிடும்."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் அமரபுர பீடத்தின் தலைவா பஞ்ஞா சீல தேரர்.

தற்போது நாடு பெரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. புராணகாலத்திலும் நாடு இத்தகைய நெருக்கடிகளை எதிர்கொண்டது. அப்போது ஆட்சியிலிருந்த சிங்கள மன்னர்கள அவற்றை வெற்றிகரமாகக் கையாண்டு ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்தினர். அது போன்று தற்போது இந்த நெருக்கடியையும் ஆட்சியாளர்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டு சிங்களத் தேசத்தை நிலைநிறுத்த வேண்டும் - இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை14

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட வகுப்புப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை நல்லூர் பிரதேச செயலரின் தலையீட்டினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து வந்து அங்கு தங்கியுள்ளவர்களுக்கும் பாடசாலை நிர்வாகத்துக்குமிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக பகிஷ்கரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இடம்பெயர்ந்து அங்கு தங்கியிருந்தவர்கள் பாடசாலையின் பின்புற மண்டபத்தில் இருக்க இணங்கியதை அடுத்து பகிஷ்கரிப்பு நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

### நால்வர் உயிரிழப்பு

வவுனியா,ஜூலை14

பல்வேறு மோதல் சம்பவங்களின்போது தமது தரப்பில் மேலும் நான்குபேர் உயிரிழந்தனர் என்று புலிகளின்குரல் நேற்றிரவு அறிவித்தது.

★ இம்மாதம் 6ஆம் திகதி பொலன்னறுவையில் ஏற்பட்ட மோதலில் இரண்டாம் லெப்டினண்ட் குலறஞ்சன் (செபமாலை பிறேம்குமார் - மட்டக்களப்பு) என்பவரும் -

★ 9ஆம் திகதி மட்டக்களப்பு கோட்டைமுனையில் ஏற்பட்ட மோதலில் கப்டன் பிறைசூடி அல்லது முரசொலி (சிற்றம்பலம் கேதீஸ்வரன் - மட்டக்களப்பு) என்பவரும் -

★ 12ஆம் திகதி அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் வீரமறவன் (தங்கவேல் ஆனந்தராஜ் - கிளிநொச்சி) என்பவரும் -

★ 12ஆம் திகதி சாவகச்சேரியில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் மைதிலி (செபமாலை மரியநாயகம் யூலியற் பெர்னாண்டோ-மன்னார்) என்பவருமே - உயிரிழந்தவர்களாவர். (இ-4)

### துப்பாக்கி வெடித்து இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை14

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததினால் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று அராலியில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

அராலி மத்தியைச் சேர்ந்த பாலசிங்கம் உதயராஜ் என்பவரே காயமடைந்தவராவார்.

தையல்கடை ஒன்றுக்குவந்த படையினர் ஒருவரின் துப்பாக்கியே தவறுதலாக வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-8)

### ஆர்ப்பாட்டம் நடத்த ஐ.தே.க. முடிவு

கொழும்பு,ஜூலை14

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை ஆட்சேபித்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் கோரி எதிர்வரும் செவ்வாயன்று கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்து வருகிறது.

ஒரு லட்சம் ஆதரவாளர்களைத் திரட்டி இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.கட்சிப் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கொறளை தெரிவித்தார்.

### பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரிக்கை

கொழும்பு,ஜூலை14

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிவடையும்வரை தற்போது பதவியில் இருக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் அரசுத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரும் கடிதம் ஒன்றை அரசுத்தரப்பு எம்.பிக்கள், நாடாளுமன்ற சபாநாயகருக்கும் பொலீஸ் மா அதிபருக்கும் அனுப்பியுள்ளனர்.

அமைச்சர்களுக்கு உள்ளது போல தங்களுக்கும் புலிகளினால் ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டுஎன்று அவர்கள் அந்தக் கடிதத்தில தெரிவித்துள்ளனர். (உ)

### வவுனியாவில் கொள்ளை

வவுனியா,ஜூலை14

வவுனியா பட்டாணிப்புளிச்சங்குளம் பகுதியிலுள்ள வீடியோ நிறுவனம் ஒன்றுக்குள் நேற்று அதிகாலை 12.30 மணிக்குள் புகுந்த - பத்துப்பேரைக்கொண்ட - ஆயுதபாணிகள் குழு ஒன்று அங்கிருந்த ஐவரைக் கடுமையாகத் தாக்கி, 50 ஆயிரம் ரூபா பணம் கேட்டு மிரட்டியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் கடையைச் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்த 18 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துக் கொண்டு அக்குழு தப்பிச் சென்றது.

படுகாயமுற்ற மூவர் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

தம்மைத் தாக்கியவர்கள் தமிழ்க்குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை தங்களால் அடையாளம் காட்ட முடியும் என்றும் காயமுற்றோர் பொலீஸாருக்குத் தெரிவித்திருப்பதாக அறியவந்தது. (உ-164)

### மின் விநியோக நேரம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை14

குடாநாட்டின் சகல பகுதிகளுக்குமான மின்சார விநியோகம் நேற்று முன்தினம் முதல் இரண்டு மணித்தியாலங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலுள்ள ஜெனரேட்டர்களைத் திருத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இது வெற்றியளிக்குமானால் ஒகஸ்ட் நடுப்பகுதியிலிருந்து 24மணிநேர மின்சாரம் வழங்குவது சாத்தியப்படலாம் என்றும் மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் ஆர். முத்துரட்ணானந்தன் தெரிவித்தார். மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும்படியும் அவர் பாவனையாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி இரவு நேர மின் விநியோகத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு: சந்திரிகா - ரணில் மாத இறுதியில் பேச்சு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இம்மாத இறுதியில் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, பிரதமராகவும் செயல்பட இடமளிப்பது குறித்தும்-

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகாரம கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவது குறித்தும் - இந்தப் பேச்சில் ஆராயப்படவிருக்கின்றது.

இந்தப் பேச்சில் வேறு முக்கிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட விருக்கின்றது. (ஐ-3)

## சுரேஷ் அணி அலுவலகம் திறப்பு

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் பிறேமச்சந்திரன் அணியினர் யாழ்.நகரில் அலுவலகம் ஒன்றை திறந்து வைத்துள்ளனர்.

முன்னர் சாந்தித் தியேட்டர் இயங்கிய கட்டடத்தில் அவர்கள் தமது அலுவலகத்தை அமைத்துள்ளனர். (ஐ-3)

## கடற்படையினர் ஆள்சேர்ப்பு நீடிப்பு

கடற்படைக்கு ஆள் திரட்டுவதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெறும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இன்றுடன் இந்த நேர்முகப் பரீட்சை முடிவடைவதாக இருந்தது. அது தற்போது 28ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (உ)

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

☛ இடம்:- கந்தரோடை மைதானம்
☛ காலம்:- 23-07-2000 (ஞாயிற்றுக்கிழமை) 12 மணியளவில்
☛ அளவெட்டி வடக்கு ஞான வைரவர் நிதிக்காக!
☛ பிரவேசம்:- 10/=

– நிர்வாகம்.

(76454)

## விசேட அறிவித்தல்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 16-07-2000ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு (பழையநேரம்) நடைபெறும். இக்கூட்டத்துக்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

*செயலாளர்,*
*தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.*

(76479)


நாளை ஆரம்பமாகிறது (15-07-2000)
க.பொ.த உயர்தரம் 2000 ஓகஸ்ட்.
பாடம்: பொதுச் சாதாரணப் பரீட்சை CGP.
நேரம்: 0900 - 1130 hrs.
*பரீட்சை நிலையங்கள்*
★ மது பாரத் கல்வி நிலையம் – யாழ்ப்பாணம்
★ மணி கல்வி நிலையம் – வேலணை
★ கலை வாணி கல்வி நிலையம் – கோப்பாய்
★ பிரத்தியேக வகுப்புக்கள்
குறிப்பு:- மேற்படி பரீட்சை நிலையங்களில் வெளிமாணவர்களும் தோற்றலாம்.
*பரீட்சை பிரிவு: முன்னோடிப் பரீட்சைகள் நிறுவனம் யாழ்ப்பாணம் – இலங்கை.*

அடுத்த வாரம் வெளியாகின்றது.
பொதுச் சாதாரண பரீட்சை வழிகாட்டி நூல் திருத்திய இரண்டாம் பதிப்பு 2000 - யூலை
P.கமலதாசன் & P.உமாசங்கர்
சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(76471)


## முதலாவது பிறந்த தின வாழ்த்து

(14-07-2000)



### செல்வன் சத்தியவரதன் குமரன்

*சத்தியவரதன் – மஞ்சுளா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் குமரன்!*

தனது முதலாவது பிறந்த தினத்தை நல்லூரில் இன்று (14-07-2000) வெள்ளிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, நெடுந்தீவு அப்பப்பா, அப்பம்மா, கட்டப்பிராய் அம்மப்பா, அம்மம்மா, வசந்தி அத்தை, சிறுபா சித்தப்பா, பிரான்ஸ் சிவா சித்தப்பா, ஆனந்தி அத்தை, ஜெயந்தி அத்தை, பரன் சித்தப்பா, சாந்தி அத்தை, கலா அத்தை, அருள் சித்தப்பா, இத்தாலி பெரியமாமா, மாமி, பாஸ்கர் மாமா, நயானி அத்தை, லண்டன் சுரேஸ் மாமா, நியூசிலாந்து சித்தி, சித்தப்பா, தம்பி, ராஜா மாமா, பேபிமாமா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் இறைவன் அருளால் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*'ரவிமதி'*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

– குடும்பத்தினர்

(76291)


மகாதேவா ஜோதிடம்
03-08-2000இல்
'சனி மாற்றம்'
பன்னிரண்டு இராசிகளுக்குமான விரிவான பலன்கள் புத்தக வடிவில் எங்கும் விற்பனையாகின்றன.
சோதிடரை,
இல.140,செல்லர் வீதி,
கல்வியங்காடு எனும் முகவரியில் தினசரி சந்திக்கலாம்.
(C/12205)

விக்னா கல்வி நிறுவனம்
பொருளியல்
திரு. M.விக்கி
B.A. (Econ.Spl.) Hons.
2001 8.00 - 9.00
10.00 - 11.00 } Sat., Sun.
2002 9.00 - 10.00
(76383)

இதோ! மீண்டும் வெளிவந்து விட்டது
லாலா சண் சயின் சோப்
15 மேல் உறைகள் சேகரித்துக் கொடுத்தால் ஓர் அப்பியாசக் கொப்பி இலவசம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.
(76477)

ராஜா
(யாழ்ப்பாணம்)
இன்று முதல் குதூகல ஆரம்பம்
பிரபுதேவா, ரோஜா, சரத்குமார், கபாலி மற்றும் பலர் நடிப்பில் இனிய பாடல்கள் நிறைந்த
இந்து
புதிய நேரம் 10.30, 2.00
(C/12207)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
இன்று மட்டும்
M.G.R., ஜெயலலிதா நடித்த
குடியிருந்த கோயில்
(ரீஸ்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30
(புதிய நேரம்),
நாளை முதல்
சூப்பர்ஸ்ரார் ரஜனியின்
படையப்பா
(C/12209)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகீஸ்வரசர்மா அன்னலட்சுமி அம்மா

சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த திருமதி யோகீஸ்வரசர்மா அன்னலட்சுமி அம்மா நேற்று (13-07-2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகீஸ்வரசர்மாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணிய ஐயர், நாகராசசர்மா, திவாகரசர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜீவதாம்பாள், மல்லிகாதேவி, ரஞ்சிதம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13-07-2000) வியாழக்கிழமை துன்னாலை மத்தி, துன்னாலையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
*துன்னாலை.* (76486)

## தம்பு தர்மலிங்கம்

நெட்டிலிப்பாய், கோண்டாவிலைச் சேர்ந்த தம்பு தர்மலிங்கம் நேற்று (13-07-2000) வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.புஸ்பநாதன் (மருமகன் - ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி)
க.திருச்செல்வம் (மருமகன் - வடபிராந்திய போக்குவரத்துச்சபை)
*நெட்டிலிப்பாய், கோண்டாவில்* (C/12214)

## திருமதி குணத்துரை சிவனேசராணி

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணத்துரை சிவனேசராணி நேற்றுமுன்தினம் (12-07-2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் அருமை மகளும் செல்லத்துரை - சுப்பம்மா தம்பதியினரின் மருமகளும் செல்லத்துரை குணத்துரையின் அன்பு மனைவியும் விஜுசியா (கொழும்பு), நிறைஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13-07-2000) வியாழக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: நிறைஞ்சன் (முறு) (மகன்)
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.* (76482)

## இளையதம்பி சின்னத்துரை

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த இளையதம்பி சின்னத்துரை நேற்று (13-07-2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவசண்முகநாதனின் (கிளை முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்) பாசமிகு தந்தையும் வசந்தியின் அன்பு மாமனாரும் கார்த்திகா, மயூரன், லாவண்யன் (வசாவிளான் ம.ம.வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-07-2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல தகனக்கிரியைகளுக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.சிவசண்முகநாதன் (மகன்)
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு.* (76480)

## சரவணமுத்து மகாலிங்கசிவம்

வேலணையைச் சேர்ந்த சரவணமுத்து மகாலிங்கசிவம் நேற்று (13-07-2000) வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் வேலணை கிழக்கைச் (மணியகாரன் வீட்டடி) சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (பென்சனியர்) - நாகேசு தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான குலசேகரம் பிள்ளை - முத்தம்மா தம்பதியினரின் மருமகனும் நவமணியின் அன்புக் கணவரும் சந்திரிகாவின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான காசிலிங்கம், சரஸ்வதி மற்றும் சாவித்திரி, இராமநாதன், சுப்பிரமணியம், காலஞ்சென்ற இலட்சுமிஅம்மா, இரட்ணேஸ்வரி, நல்லநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நடராசா, Dr.இராமச்சந்திரன், காலஞ்சென்ற நடேசானந்தன், சிவநாயகி, காலஞ்சென்ற தனநாயகம், பாலகிருஷ்ணன், தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் நா.குமாரசாமியின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-07-2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ம.சந்திரிகா (மகள்)
*15/10, இராமநாதன் வீதி, தலையாழி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (76485)

## கந்தையா தங்கப்பிள்ளை

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கப்பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மா, ஐயாத்துரை, சின்னையா ஆகியோரின் சகோதரியும் நீலாவின் அன்புத்தாயாரும், சி.ஆனந்தனின் (காபரேற்றர்-சிவப்பிரகாசம்வீதி) மாமியாரும், ஜெயானந்தன்(சுவிஸ்), ஜெயந்தி, மோகனகுமார் (சுவிஸ்), ஜெயசுதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14-07-2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இலக்கம் 130, சிவப்பிரகாசம் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: காபரேற்றர் ஆனந்தன் (மருமகன்)
*130, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.* (76478)

## ஈரானில் பிறந்த அதிசயக் குழந்தை

தெஹ்ரான், ஜூலை 14

ஈரானில் பிறந்த ஒரு பெண் குழந்தை இரண்டு முகங்களைக் கொண்டுள்ளது. நான்கு கண்களும் நான்கு காதுகளும் உள்ள இந்தக்குழந்தைக்கு இரண்டு வாய்களும் இரண்டுமூக்குகளும் உள்ளன.

குழந்தை கர்ப்பத்தில் இருந்தபோது தாய் அதிகளவு மாத்திரைகளை உட்கொண்டதாலேயே இது நேர்ந்ததாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

3.5 கிலோகிராம் எடையுள்ள இந்த விசித்திரக் குழந்தை ஆரோக்கியமாக உள்ளது.

இரண்டு வாய்கள் இந்தக் குழந்தைக்கு இருந்தாலும் ஒரு வாய்வழியாக மட்டுமே பால் அருந்துவதாக தாயார் தெரிவித்தார்.

கர்ப்ப காலத்தில் தான் மிகவும் பலவீனமாக இருந்ததால் பலவிதமாத்திரைகளை அதிகமாக உட்கொண்டதற்காக இப்போது வருந்துவதாக அவர் கவலையோடு கூறினார்.

(ஐ-ஒ)

# புலி ஆதரவாளரின் ஆன்மீக குருவான கருணாநிதியைப் பதவி நீக்குங்கள்!

## மத்திய அரசிடம் ஜெயலலிதா கோரிக்கை





சென்னை, ஜூலை 14

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் மறுமலர்ச்சித் தி.மு.க. மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றின் ஆன்மீகத் தந்தையாக விளங்கும் தமிழக முதலமைச்சர் கருணாநிதியையும், அவரது தி.மு.க. அரசையும் உடனடியாகப் பதவி விலக்க வேண்டும் என்று அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புலிகளின்ஆதரவாளர்களை கண்டித்து அவர் வெளியிட்ட ஆறு பக்க அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கையை எழுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகத் தமிழகத்தில் செயற்படுபவர்களுக்கு ஆன்மீகத் தந்தையாக கருணாநிதி இருந்து வருகிறார். அவர் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதுடன், தமிழகக் கட்சிகளுக்கு ஊக்கமும் அளித்து வருகிறார்.

கருணாநிதியின் ஆட்சி தொடர்ந்தால் விடுதலைப் புலிகளின் தளமாகத் தமிழகம் மாறிவிடும் அபாயம் உள்ளது. இத்தகைய நிலை ஏற்படுவதைத் தடுக்க உடனடியாக தி.மு.க ஆட்சியை மத்திய அரசு கலைக்க வேண்டும்.

அத்துடன் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க., ம.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றை தேசிய முன்னணியிலிருந்தும் வெளியேற்ற வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (ஐ—க-3)

## 56 நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த

# பணயக் கைதிகள் அனைவரும் பிஜி கிளர்ச்சியாளர்களால் விடுதலை!

## ஆனந்தக் கண்ணீருடன் வெளியே வந்தனர்

சுவா, ஜூலை 14

பிஜியில் நாடாளுமன்றக் கட்டடத்தில்தடுத்து வைக்கப்பட்டிருந்து பதவி நீக்கப்பட்ட இந்திய வம்சாவளிப் பிரதமர் மகேந்திர சௌத்ரி மற்றும் அவரது மகன் ராஜேந்திரா உட்பட 18பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மே மாதம் 19 ஆம் திகதி முதல் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த இவர்கள் விடுதலை செய்யப்பட்டதுடன் 56 நாள்களாகத் தொடர்ந்து பணய நாடகம் முடிவுக்கு வந்துள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் வெளியே வந்த போது அவர்கள் கண்களில் இருந்து நிம்மதியினால் ஆனந்தக் கண்ணீர் பெருகியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். சௌத்ரி உட்பட அனைவரும் செஞ்சிலுவைச் சங்க டிரக்குகளில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

பிஜிபழங்குடித்தலைவர்கள் பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படாவிட்டால் புதிய பிரதமரையும் ஜனாதிபதியையும் தேர்ந்தெடுக்கும் கூட்டத்தை தம்மால் நடத்த முடியாதென்று முன்னர் எச்சரித்திருந்தனர்.

இதனை அடுத்தே தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்— புதிய பிரதமர் பதவிக்குராகு கனயமா என்பவரை கிளர்ச்சித் தலைவர் ஸ்பைட் சிபார்சு செய்துள்ளார்.

அத்துடன்22 பேர்கொண்ட புதிய அமைச்சரவையை அமைக்கவும் ஸ்பைட் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதே சமயம் —


ஜோர்ஜ்ஸ்பைட் பிரதமரானால் ராஜீய, இராணுவ, வர்த்தகத் தடைகளை பிஜி எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று நியூசிலாந்தும் ஆஸ்திரேலியாவும் எச்சரித்துள்ளன.

இதனால் ஸ்பைட்டின் பிரதமர் ஆசை தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ளது.

(ஐ-ஒ)

உலக அரங்கில்

# நடிகர் சங்கத் தலைவராக விஜயகாந்த் தெரிவானார்



சென்னை, ஜூலை 14

தென்னிந்தியத் திரைப்பட நடிகர் சங்கத் தலைவராக நடிகர் விஜயகாந்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சங்கத்தின் மற்றைய பிரதான பதவிகளிலும் விஜயகாந்த் அணியில் போட்டியிட்டவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.


இதற்கு முன்னர் நடிகர் சங்கத்தின் தலைவராக எம்.ஆர். ராதாவின் மகனும், ராதிகாவின் சகோதரருமான நடிகர் ராதாரவி பல ஆண்டுகளாக இருந்து வந்தார். இவருக்கு விஜயகாந்த் ஆதரவு தெரிவித்து வந்தார்.

கடந்த 98 ஆம் ஆண்டு சரத்குமார், விஜயகுமார், நெப்போலியன் போன்றோர் ராதாரவியின் தலைமைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் நடிகர் சங்கக் கூட்டத்தில் நடிகர்கள் கட்டிப் புரண்டு சண்டை போட்டதும் நடிகைகளின் உடைகள் கிழிக்கப்பட்ட அவலமும் நடந்தது.

இந்த மோதலைத் தவிர்க்கவே விஜயகாந்த் தற்போது தேர்தலில் போட்டியிட்டுத் தலைவரானதாகக்கூறப்படுகிறது.

நடிகர் சங்கத்திற்கு கட்டடம் கட்ட தமிழக அரசு சுமார் இருபது வருடங்களின் முன் வழங்கிய கடன் உதவி இன்று வட்டியுடன் 2 கோடி ரூபாவாக உயர்ந்து விட்டது.

"கோடி கோடியாகச் சம்பாதிக்கும் நடிகர், நடிகைகளால் இந்தப் பணத்தை திருப்பிச் செலுத்த முடியாதா?" என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஆகவே இந்தக் கடனை அடைப்பதே தனது முதல் கடமை என்று விஜயகாந்த் தெரிவித்துள்ளார். (ஐ-ஒ)




பலஸ்தீனர்களுடனான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக இஸ்ரேல் பிரதமர் எகுட்பராக் அமெரிக்காவில் பென்குரியன் விமான நிலையத்திற்குச் சென்று இறங்கியபோது அவருக்கு ஆதரவாகவும் சமாதானம் முயற்சிகளை வரவேற்றும் இஸ்ரேலியர்கள் கூடி நின்று ஆதரவு தெரிவித்த காட்சி. பராக் இந்தப் பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ள எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-ஒ)

# மும்பையில் மழைக்கு 40 பேர் பலி

புதுடில்லி, ஜூலை 14

மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பெய்து வரும் பெரும் மழைக்கு இதுவரை 40 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தத் தொடர் மழையால் மும்பையில் ஏற்பட்ட நிலச்சரிவில் 22 பேர் உயிருடன் புதையுண்டனர். மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள காட்கோவரில் வெள்ளத்தில் மூழ்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மழையினால் மும்பை நகரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

நகருக்கான சாலை, ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

அலுவலகங்களும் கல்லூரிகளும் விடுமுறை விடப்பட்டுள்ளன. (ஐ-ஒ)

## செய்தித் துளிகள்

### போர் ஒத்திகை

சென்னை, ஜூலை 14

நாட்டின்போர்த்திறனை மேம்படுத்த இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்தியப் பிரிவு வங்கக் கடலில் போர் ஒத்திகையை நடத்தவுள்ளது.

இந்த ஒத்திகையில் மேற்குப் பிராந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவற்படை ஆகியனவும் பங்குபற்றுகின்றன.

மேற்கண்ட படைப் பிரிவுகளின் கப்பல்கள், கடல் விமானங்கள், போர் படகுகள் போன்ற அனைத்தும்ஒத்திகையில் ஈடுபடுத்தப்படும். (இ-ஒ)

### இராணுவ உதவி

வாஷிங்ரன், ஜூலை 14

சீனா கடந்த 8 முதல் 18 வாரங்களாக ரேடார்கள் வழங்கியும் இராணுவ நுட்பத்திறன் பயிற்சி அளித்தும் பாகிஸ்தானுக்கு உதவி வருவதாக அமெரிக்க உளவு விசாரணை அமைப்புகள் தெரிவித்துள்ளதாக 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பானஆட்சேபனை குறித்து சீனாவிற்கு அடுத்த வாரம் செல்லவுள்ள அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் பேச்சு நடத்துவார் என்று கூறப்படுகிறது.

(இ-ஒ)

### அரசு அறிக்கை

சான்போலோ, ஜூலை 14

பிரேசிலில் 30 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாக அரசு அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தொழிலாளர்கள் 16 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றும் —

இவர்களில் 10 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மிகக்குறைந்த ஊதியம் அல்லது ஊதியம் பெறாத நிலையில் இருக்கிறார்கள் என்றும் அந்த அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-ஒ)

### பேச்சுவார்த்தை

ஜம்மு, ஜூலை 14

காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா நாளை டில்லியில் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து மாநில சுயாட்சி குறித்துப் பேச்சு நடத்துவார்.

காஷ்மீர் சென்றிருந்த வாஜ்பாயின் அழைப்பைத் தொடர்ந்தே இந்தப் பேச்சு வார்த்தை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிரதமரின் காஷ்மீர்ப் பயணமும், பேச்சுக்கான அழைப்பும் மத்திய மாநில அரசுகளுக்கிடையே நிலவி வந்த பதற்ற நிலையைக் குறைக்கும் என்று கருதப்படுகிறது. (இ-ஒ)

### விற்பனை ரத்து

டெல்அவிவ், ஜூலை 14

'பால்கோன் எயர் பொக்ஸ்' இராணுவ விமானங்களை சீனாவிற்கு விற்கும் பேரத்தை இஸ்ரேல் ரத்துச் செய்துவிட்டது.

இந்த இராணுவ விமான விற்பனையை அமெரிக்கா கடுமையாக எதிர்த்து வந்தது. 25 கோடி டொலர் பெறுமதியான இஸ்ரேல் விமானங்கள் சீனாவிற்குக் கிடைத்தால் தைவானுடனான இராணுவ சமநிலை பாதிக்கப்படும் என்று அமெரிக்கா கருதியது.

(ஐ-ஒ)

# விவசாயிகளுக்கு மாதம் 20 லீற்றர் மண்ணெண்ணெய்

## செயலகத்தில் நேற்றுநடைபெற்ற கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 14

விவசாயி ஒருவருக்கு ஒவ்வொரு மாதமும் 20 லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்பட வேண்டும் என்று நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற எரிபொருள் மற்றும் உணவு விநியோகம் தொடர்பான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர்கள், ப. நோ. கூ. சங்கப்பிரதிநிதிகள், பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விவசாயிகளுக்குத் தேவையான மண்எண்ணெய் சீராக விநியோகம் செய்யப்படாதது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அப்பொழுது விவசாயிகளுக்குத் தேவையான மண்எண்ணெயைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் விவசாய சம்மேளனம் ஊடாக விநியோகிப்பது எனவும்—

ஒரு விவசாயிக்கு மாதாந்தம் 20 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம் செய்வது என்றும் — தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதி ஒருவர் உரை நிகழ்த்தும்போது கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து இன்றுவரை விவசாயி ஒருவருக்கு 4லீற்றர் மண்எண்ணெய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதுஎன்றும் அதுவும் குறிப்பிட்ட சில இடங்களிலுள்ள விவசாயிகள் மட்டுமே இதனை பெற்றுள்ளனர் என்றும் ஏனைய விவசாயிகள் போத்தல் அறுபதுருபா வீதம் மண்எண்ணெயை கறுப்புச் சந்தையில் வாங்கி விவசாய பயிர்களுக்கு நீர் பாய்ச்சினார்கள் என்றும் தெரிவித்தார்.

ப. நோ. கூ. சங்கம் மற்றும் எரிபொருள் நிலையங்களில் இல்லாத மண்எண்ணெய் கறுப்புச் சந்தைக்கு எப்படி வந்தது என்றும் அவர் கேள்வி எழுப்பினர்.

### மே மாத நிவாரணம்

நிவாரண விநியோகம் தொடர்பாக ஆராய்ந்த போது, மே மாத நிவாரணம் பலருக்கு வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விவரங்கள் திரட்டப்பட்டு உண்மை நிலையை அறிய வேண்டும் அரச அதிபர் தெரிவித்தார்.

### மா விநியோகம்

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு அடுத்து வரும் கப்பலில் 2 ஆயிரத்து 750மெ. தொன் மா எடுத்து வரப்படுவதாகவும் மா தற்பொழுது தாராளமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சில ப. நோ. கூ. சங்கங்களில் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது மாவின் மேலதிக கையிருப்பு குறைந்து காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பாண்

350 கிராம் பாண் 7 ரூபா 50 சதத்துக்கு விற்பனை செய்யப்படுகின்ற போதும் சில பேக்கரிகளில் உற்பத்தி செய்யப்படும் பாண் தரமற்றதாக இருந்து வருகின்றது.

இவ்வாறு தரமற்றதாக, நிறைகுறைவாக உற்பத்தி செய்யப்படும் பாண் தொடர்பாக அந்தந்தப் பகுதி பிரதேச செயலரிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்ய வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

### முன்னேற்ற அறிக்கை

மே, ஜூன் மாதங்களில் விநியோகம் செய்யப்பட்ட நிவாரணம் தொடர்பான முன்னேற்ற அறிக்கை பிரதேச செயலர்களினால் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் அவற்றை உடனடியாக அனுப்பி வைத்து ஜூலை மாத விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யுமாறும் அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

மீற்றர் பதிவுகள் இயங்காமலிருக்கும் எரிபொருள் நிலையங்களுக்கு சீல் வைக்குமாறும் அரச அதிபர் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

கொடிகாமத்திலிருந்து நெல்லியடி ஊடாக காலை 6 மணிக்கு நடத்தப்படும் பஸ் சேவைபோன்று யாழ்ப்பாணத்திலிருந்தும் காலை 6 மணிக்கு கொடிகாமம் வரை ஒரு பஸ் சேவை நடத்தப்பட வேண்டும் என்று கொடிகாமம் ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர். (இ-5)

## கந்த முருகேசனார் நினைவு விழா

நெல்லியடி, ஜூலை 14

தமிழ்த்தாத்தா கந்த முருகேசனாரின் 35 ஆவது வருட நினைவு விழா அண்மையில் புலோலியில் நடைபெற்றது.

இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. எஸ் ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி, கே. மயிலேறும் பெருமாள், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் அ. நடராஜா, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் எஸ். சாள்ஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

புலோலியிலுள்ள கந்த முருகேசனாரின் சிலைக்கு யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஆர். உருத்திரா, இளைப்பாறிய அதிபர் த. தருமலிங்கம், பருத்தித்துறை பிரதேச சபைச் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி ஆகியோர் மாலை அணிவித்தனர். (இ-109)

## நிதி ஒதுக்கீடு ரத்துச் செய்யப்பட்டது

நெடுந்தீவு, ஜூலை 14

கிராமங்களை விஸ்தரிக்கும் திட்டத்தின்கீழ் நெடுந்தீவு பிரதேசசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் அ வெ. அரியநாயகம் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் இறங்குதுறையின் அபிவிருத்திக்கென 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (க-111)

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச்சேவை 2 தடவைகள்

நெடுந்தீவு, ஜூலை 14

கடந்த புதன்கிழமை தொடக்கம் நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவைகள் தினசரி இரு தடவைகள் இடம்பெறும் என நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் சே எக்ஸ். செல்வநாயகம் தெரிவித்தார்.

நெடுந்தீவில் இருந்து காலை 7 மணிக்கும் பிற்பகல் 1 30 மணிக்கும் குறிகாட்டுவானில் இருந்து காலை 10.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் படகுச் சேவை இடம்பெறும்.

நெடுந்தீவு பல நோ, கூ, சங்கப் படகும் தனியார் படகான ''அக்குவாட்டிபும்'' சேவையில் ஈடுபடும். (க-111)

## தவணைப் பரீட்சை

பருத்தித்துறை, ஜூலை 14

பருத்தித்துறை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சை இம்மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதிவரை நடைபெறுமென பருத்தித்துறைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. என். புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (இ-118)

## கமநல அபிவிருத்திச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூலை 14

விவசாயத் துறையின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு கமநல அபிவிருத்தி நகல் சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நெற் செய்கை மற்றும் விவசாயப் பயிர்ச்செய்கையாளர்களின் உரிமைகளை உத்தரவாதம் செய்தல்—

கமநல அபிவிருத்திச் சபை மற்றும் காணி வங்கி என்பவற்றை உருவாக்குதல்—

கமநல நீதிபதிகள் மன்றம் அமைத்தல்—என்பன இந்த நகல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதி இன்றிப் பயிர்ச்செய்கை தவிர்ந்த வேறு காரணங்களுக்கு நெற்செய்கைக் காணிகளைப் பயன்படுத்தக்கூடாது எனவும் இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் 1979 ஆம் ஆண்டின் கமநல சேவைகள் சட்டம் ரத்துச் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-க)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை ஜூலை 14

வணணை வடமேற்கு ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் காலை 9 மணிக்கும் இடம்பெறும். (ஐ-30)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 14

கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் (ஐயனார்) ஆலய தேர்த்தரிப்பிடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8. 24 மணிமுதல் 10. 13 மணிவரையுள்ள வேளையில் நடைபெறும். திறப்பு விழாவைத் தொடர்ந்து தேர் தரித்தல் நிகழ்வும் இடம்பெறும். (க)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடபிராந்திய இந்துப் பேரவையின் அனுசரணையுடன் அராலி அகாயக்குளம் விநாயகராலய இந்து மாமன்றம் சமய தீட்ஷை வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை ஆலயத்தில் நடைபெறவுள்ளது

காலை 7. 30 மணி முதல் கை. திருஞான சம்பந்தக் குருக்கள் தீட்ஷை வழங்குவார். (க)

யாழ்ப்பாணம், ஜூலை 14

சுதுமலை, விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன் கோயில் பாலஸ்தாபனம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி 59 நிமிடம் தொடக்கம் 8 மணி 59 நிமிடம் வரையிலான சுபவேளையில் நடைபெறும். (க-15)

கொழும்புத்துறை, ஜூலை14

அராலி மேற்கு வட்டியவத்தை ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணிமுதல் 10. 15 மணி வரையான நேரத்தில் நடைபெறும். (க-30)

* * *

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலைஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 10. 30 மணி தொடக்கம் நண்பகல் 12. 30 மணி வரை நாடுநலம் பெற, மக்கள் மனநிம்மதியுடன் வாழ இறை ஆசிவேண்டி பஜனை, கூட்டுப் பிரார்த்தனை, வழிபாடுகள் என்பன நடைபெற்று வருகின்றன. (க-30)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

அச்சுவேலி, ஜூலை 14

வலி. கிழக்குப் பிரதேச சபைப் பிராந்தியத்தில் உள்ள முன்பள்ளிப் பொறுப்பாசிரியர்களுக்கான கூட்டம் நீர்வேலி பிரதேச சபை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி ஞானேஸ்வரி கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும்.

வலி. கிழக்குப் பிரதேச சபைப் பிராந்தியத்திலுள்ள கோப்பாய் உப அலுவலகம், நீர்வேலி உப அலுவலகம், புத்தூர் உப அலுவலகம், அச்சுவேலி உப அலுவலகம், உரும்பராய் ஊரெழு உப அலுவலகம் ஆகிய பிராந்தியங்களிலுள்ள முன்பள்ளிகளில் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களைத் தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வலி. கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி கேட்டுள்ளார். (க-111)

## வீடியோ திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும், இணைந்துவழங்கும் வீடியோ திரைப்படக் காட்சியில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ''மீண்டும் ஒரு காதல் கதை'' திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக புவியியற் றுறைமண்டபம்இலக்கம்2 இல் இந்தப் படக் காட்சி இடம்பெறும். (இ-7)

## சமயதீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 14

அராலி அகாயக் குளம் விநாயகர் ஆலயத்தில் இன்று காலை 7.30 மணிக்கு சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்,

கரணவாய் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் தீட்சை வழங்குவார். 'ஆலய வழிபாடும் திருமுறைகளும்'' என்ற பொருளில் கலாபூஷணம் பே. சந்திரசேகரமும் 'தீட்சையும் அதனுடைய தத்துவமும்'' என்ற பொருளில் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்களும் சொற்பொழிவாற்றுவர்.

வடபிராந்திய இந்துப் பேரவையின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெறும். (இ-7)

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா காத்திகேசு

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா காத்திகேசு 04—07—2000 அன்று மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் பொன்னம்மா, ஆறுமுகம் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ஆ. இராஜலிங்கம்
(மருமகன்)

சிங்கம் லேன்,
உடுவில்.

(சி/ 72202)

### சின்னக்குட்டி திரீராசா (ரவி)

(கனடா)

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி திரீராசா என்பவர் கனடாவில் 24–6–2000 ஆம் திகதி மாரடைப்புக் காரணமாக திடீர் மரணமானார் என்பதை எனக்குக் கிடைத்த தகவலின்படி அறியத்தருகின்றேன். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. துரைராசா,
(மாமன்)

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தற்போதைய முகவரி:
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(76475)

உதயன்

## மனமாற்றத்தின் மறுபக்கம்!

விடுதலைப் புலிகளை நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அழைப்பது என்று முடிவு செய்யும் அளவுக்கு அரசிடம் மனமாற்றம் வந்திருப்பது குறித்து நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம். விடுதலைப் புலிகள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை; அதனால் அவர்களைப் புறக்கணித்துவிட்டு, ஓரங்கட்டிவிட்டு, ஒழித்துவிட்டுத் தமிழர் பிரச்சினைக்குத் தன்னால் அரசியல் தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்ற நம்பிக்கையை அரசாங்கம் இழந்து விட்டதால் இப்போது அரசிடம் மன மாற்றம் உண்டாகியுள்ளது என்றே பலரும் கருதுகிறார்கள்.

நடைமுறைப்படுத்தக் கூடியதை, யதார்த்தத்தை அரசு இப்போதாவது உணர்ந்திருக்கிறது என்றும் இந்த மனமாற்றத்துக்கு அர்த்தம் கொள்ளலாம்.

பொதுவாக - மேல் எழுந்தவாரியாக - மேற்சொன்ன கருத்துக்களும் அர்த்தங்களும் பலரது மனங்களில் எழுந்தாலும் இந்த மனமாற்றத்தின் மறு பக்கமே மிகவும் பெரியது. கவனமாக நோக்கப்படவேண்டியது அதுவே.

1994 ஆண்டுத் தேர்தலின் மூலம் பதவிக்கு வந்தபோதே, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது. பிரதமராகப் பதவி வகித்த சந்திரிகா பின்னர் நிறைவேற்று ஜனாதிபதி என்ற சிம்மாசனத்தில் அமர்ந்த போதும் அதே வாக்குறுதி அளிக்கப்பட்டது.

ஆனால், அரசாங்கத்தினால் இயலவில்லை. அரசு இதுவிடயத்தில் உரிய கவனம் செலுத்தவில்லை. மாறாக, போர் மூலம் சமாதானம் என்ற புதிய நிலைப்பாட்டுக்கு மாறியது. அந்த நிலைப்பாடு போர் மூலம் தமிழ் மக்களை அழிப்பது, அகதிகளாக்குவது என்ற நடைமுறையாக பரிணமித்தது.

மறுபுறத்தில் போருக்குப் பெரும் செலவாகுவதால் நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளம் நோக்கிக் கீழிறங்கியது; மக்களின் வாழ்க்கை நிலை நொய்ந்து போனது.

இவற்றை அவதானித்துக் கொண்டிருந்த இலங்கைக்கு நிதி உதவி மற்றும் பலவகை உதவிகளை வழங்கும் சர்வதேச நாடுகள் பலவும் தமது உதவிகளாலும் நன்கொடைகளாலும் இலங்கை மக்கள் உரிய பயன் பெறவில்லை என்பதைக் கண்டுகொண்டன. போரினால் நாடு சீரழிவதைப் பார்த்தனர். அதன் விளைவாக இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் உட்பட சர்வதேசநாடுகள் பலவும் அரசுக்குப் பெரும் அழுத்தம் போட்டன.

அந்த அழுத்தத்துக்கு ஓரளவு 'மசிய' வேண்டிய அல்லது மதிப்புக் கொடுக்க வேண்டிய தேவை அரசுக்கு. அந்தத் தேவையின் வெளிப்பாடே இப்போதைய மனமாற்றத்தில் ஒரு பகுதி எனலாம்.

தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்கும் தீர்வு யோசனையை முன் வைத்துள்ளோம். அது குறித்து, இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் இல்லாதவாறு, ஆளும் - எதிர்க்கட்சிகள் இணக்கப்பாடு எய்தி உள்ளன. தமிழ்க் கட்சிகளிடமும் அதனைச் சமர்ப்பித்துள்ளோம். இப்போதைய யோசனையில் திருத்தங்கள் தேவைப்படின் அவற்றைச் செய்வதற்குப் பின்நிற்கமாட்டோம். விடுதலைப் புலிகளிடமும் அதனைக் கொடுத்துப்பேச விரும்புகிறோம். நிபந்தனையின்றிப் பேசுவதற்குக் கதவுகளைத் திறந்து விட்டுள்ளோம் -

பார்த்தீர்களா! பந்து இப்போது விடுதலைப் புலிகளிடமே உள்ளது. அவர்கள் தீர்வு முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்காவிடில் நாம் என்ன செய்யமுடியும் - என்று சர்வதேசங்களுக்குக் கூறி அவற்றின் அழுத்தத்திலிருந்து தப்பிக் கொள்வதும் மனமாற்றத்தின் ஒரு நோக்கம். வெளிநாடுகள் பலவற்றுக்கும் ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர்கள் விரைவதன் இரகசியமும் இதுதான். பொதுத் தேர்தல் காலம் நெருங்குகிறது. அதற்கு முன்னர் இவ்வாறு சிலு சிலுப்புக் காட்டினால் தான் வாக்கு வங்கியை பெருக்கலாம் என்பது இன்னொரு நோக்கம்.

நோக்கங்கள் எத்தகையனவாக இருந்த போதிலும் தீர்வு யோசனை தமிழர்களுக்குப் பூரண சுயாட்சியை வழங்குவதற்குக் கூட வகை செய்யவில்லையே! அந்த அம்சத்தைச் சர்வதேச சமூகம் கருத்தில் கொள்ளமாட்டாதா என்ன?

# ஆன்ம ஈடேற்றம் அடைவதற்கு ஆலயத் திருத்தொண்டே சாதனம்

உலகம் எப்பொழுது தோன்றியதோ அப்போதே சிவவழிபாடும் தோன்றியது எனலாம். சைவ சமயமானது ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்குகின்றது. சைவ மக்கள் ஒவ்வொருவரும் இறைவனுக்குத் தொண்டு செய்து வழிபாடியற்றுவது மூலம் முத்தியின்பத்தை அடையலாம் என்பது நாயன்மார் காட்டிய நெறியாகும்.

இதற்கு திருநாவுக்கரசு நாயனார் வரலாறு சான்று பகர்கின்றது. சிவனுக்குத் திருத்தொண்டு செய்வதைப் பெரும்பேறாகக் கருதியவர் அப்பரடிகள்.

"நிலை பெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா, நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு, புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந் தேத்திப் புகழ்ந்துபாடி" என்பது அவரது தேவாரம்.

**ஞானக்கதிர்**

ஆண்டவனின் சரணாகமலத்தைக் காட்டிலும் சாந்தி அளிக்கக்கூடியது எதுவுமே இவ்வுலகில் இல்லை. எனவே பக்தியினாலும், தியானத்தினாலும் எம்மை ஆத்ம சுத்தி செய்வதால் மட்டுமே ஆன்ம ஈடேற்றத்தை அடையலாம்.

எம் உடம்பிலே சக்தி குறையும்போதுதான் நோய் பற்றிக் கொள்கிறது. அதுபோலவே நம்முடைய பலவீனமான அநுஷ்டானக் குறைவுதான் இன்றைக்கு எம்மைப் பலவகையான இன்னல்களுக்கும் இடுக்கண்களுக்கும் ஆளாக்கி உள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது.

லட்சாதிலட்சம் செலவு செய்து ஆலயங்களில் புணருத்தாரணம், கும்பாவிஷேகம், சங்காபிஷேகம் மற்றும் அலங்கார உற்சவங்கள் செய்வதால் மட்டும் ஆண்டவன் கிருபை கிடைக்குமென்று எண்ணுவது கூடாது. குருமார்களாக இருந்தாலும்சரி, பரிபாலகர்களாக இருந்தாலும் சரி இன்று பலர் ஆண்டவனிடம் பயபக்தி கொண்டு உலக சேமத்திற்காகச் சேவையாற்றுவதை விடுத்து தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆலயப் பணிகளில் ஈடுபடுவது மிகவும் விசனத்தைத் தருகிறது.

ஆலயங்களில் உள்ள மூர்த்திகளுக்கு நிவேதனம், காணிக்கைகள் செலுத்துவது எல்லாம்வல்ல எமையெல்லாம் படைத்துக் காக்கும் பரம்பொருளுக்கு நன்றி செலுத்துவதற்காகச் செய்யப்படுகின்ற போதிலும் ஆலயங்களில் ஒழுங்காகத் திருப்பணிகள் செய்து உதவ வேண்டிய கடமை சைவர்களாகிய எம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

பூசை நேரத்துக்கு ஆலயத்திற்குச் சென்று காணிக்கையைச் செலுத்திவிட்டு வருவதால் மட்டும் இறை அநுக்கிரகம் கிடைக்கும் என்று எண்ணுவது தவறு.

எத்தனையோ ஆலயங்களில் ஈஸ்வரனுக்குச் சாத்தும் பட்டுத்துணிகூட அழுக்குத் துணியாகவே இருப்பதைக் காண்கிறோம். விளக்குகளோ எண்ணெய் காணாமல் திரிகள் கருகி, களிம்பு ஊறிக் காணப்படுகின்றன. உட்பிரகாரங்களோ குப்பை கூழங்கள் மலிந்து காணப்படுகின்றன. இவற்றை ஆலயத்தை வழிநடத்தும் குருமார்களும் ஆலயத்துக்கு வரும் அடியார்களும் நிவர்த்திசெய்ய முற்படவேண்டும்.

**நயினை விஜயன்**

ஆனால் எமது பிரதேசங்களில் எத்தனையோ ஆலயங்கள் கவனிப்பாரற்று அநாதரவாகக் கிடக்கின்றன. அக்கோயில்களைச் சார்ந்து வசிப்பவர்கள் அந்தந்த ஆலயங்களில் சிரமதானப் பணிகளோ, திருத்தொண்டுகளோ செய்யலாம்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. அதாவது கோயில்கள் உரியமுறையில் பராமரிக்கப்பட்டு நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெறாவிட்டால் ஊரே பாழ்படும் என்பதுதான் அதன் கருத்து.

ஆகவே நாம் ஆலயங்களில் திருத்தொண்டுகளை ஆற்றி வருவோமானால் எமக்கு யாதொரு குறையுமில்லாமல் எல்லாம் வல்ல பரம்பொருள் என்றும் எம்மைக் காத்து நிற்பான் என்பது திண்ணம்.

★

# சிலாவத்துறை குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

கொழும்பு,ஜூலை14

மன்னார் சிலாவத்துறை மக்கள் அமைதியாகத் தொழில் செய்ய வழியமைத்துக் கொடுக்க வேண்டும் அல்லது வேறுபகுதியில் அவர்களுக்கு இருப்பிடம் அமைத்துக் கொடுத்து சுமுகமான சூழ்நிலை வரும்வரை நிவாரணம் வழங்க வேண்டும் என்று வன்னி மாவட்ட ரெலோ நாடாளுமன்ற உறுப்பினர் கே.அடைக்கலநாதன் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

மன்னார் சிலாவத்துறை மீனவர் பிரச்சினை தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிலாவத்துறைப் பகுதியில் வாழும் மக்கள் மின்பிடித்தலையே பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். போர் காரணமாக இவர்கள் இடம்பெயர்ந்து மடுப்பகுதியில் தஞ்சம் புகுந்தனர்.

மடுப்பகுதி படையினர் கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது இந்த மக்கள் சிலாவத்துறைப் பகுதியில் மீளக் குடியமர்ந்தனர்.

மீள் குடியமர்வின் பின்னர் இந்த மக்களுக்கு கடற்றொழில் செய்யக்கூடிய நிலை இல்லை. அத்துடன் நிவாரணமும் வழங்கப்படவில்லை. ஆனால் இன்றைய காலகட்டத்தில் மீன்பிடித் தொழிலைச் செய்யக் கூடிய நிலை இல்லை - இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மது போதையில் ரகளை செய்த கிராம அலுவலர் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை14

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அலுவலக நேரத்தில் மது போதையில் சென்று தகாத முறையில் நடந்து கொண்டதாகக் காணப்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கிராமசேவை அலுவலர் ஒருவர் யாழ். செயலகத்தினால் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

மேற்படி கிராமசேவகர் பிரதேச அலுவலகத்துக்குள் நுழைந்து அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் அதிகாரிகளைத் தகாத வார்த்தைகளினால் ஏசி ரகளை புரிந்தாராம்.

இது குறித்து நல்லூர் பிரதேச சபை அலுவலர்களினால் யாழ். செயலகத்துக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து அங்கு நேரில் சென்ற செயலக உயர் அதிகாரிகள் குறிப்பிட்ட கிராமசேவகர் ஒழுக்கமற்ற முறையில் நடந்து கொண்டதை நேரில் கண்டனர் என்றும்-

அதைத் தொடர்ந்து மேற்படி கிராமசேவகர் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

பிரஸ்தாப கிராமசேவகர் முன்பும் பல தடவைகள் இவ்வாறு மது போதையில் சென்று பிரதேச செயலக அதிகாரிகளுக்கு இடையூறுகளை விளைவித்து வந்தவர் என்றும் -

அதைத் தொடர்ந்து அவர் சாவகச்சேரிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாதமையினால் பின்னர் மீண்டும் பழைய இடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## குழாய்க்கிணறு மலசலகூடம் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை14

தும்பளை தெற்குப் பகுதி மக்களின் பாவனைக்காகப் புதிதாக மலசலகூடம் ஒன்றும், குழாய்க்கிணறு ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

தும்பளை தெற்கு சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், சிக்கனக் கடனுறவுச் சங்கம் ஆகிய மூன்றும் இணைந்து மேற்கொண்ட தீவிர முயற்சியின் பயனாக, போருட் நிறுவனத்தினால் இவை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (ஐ-15)

## யெகோவா வட்டார மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூலை14

யெகோவாவின் சாட்சிகளுடைய வட்டாரமாநாடு இம்முறை இரண்டு இடங்களில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"கடவுளுடைய வழியில் நடந்து இப்பொழுதே பயன் பெறுங்கள்" எனும் பொருளில் நடைபெறும் இந்தமாநாடு நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினமும் பிரதானவீதி, பருத்தித்துறையிலும் -

எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையிலும் காலை 9 மணிமுதல் இடம்பெறும். (ஐ-7)

## பஸ் விபத்து

கொழும்பு,ஜூலை14

பேராதனை - கம்பளை பிரதான வீதியில் நேற்று முன்தினம் காலை பயணிகள் பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். 50 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கண்டி, பேராதனை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-7)

## பரீட்சை முடிவு விரைவில்

யாழ்பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட முதற் கலைத் தேர்வு, முதல் வணிகத் தேர்வு பரீட்சைகளுக்கு வெளிவாரியாகத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் விரைவில் வெளியாகஉள்ளதாக வெளிவாரிப்பரீட்சைகள் அலகினர் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

**நாளை**

ஆனி 31

சனிக்கிழமை

திதி: சதுர்த்தசி

மாலை 5.51 வரை

நட்சத்திரம்: மூலம்

முற்பகல் 10.06 வரை

சுபநேரம்: 3.00 - 4.30

ராகுகாலம்: 9.00 - 10.30

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நல்லவர்கள் எளிதில் ஏமாறும் தன்மையுடையவர்களாக இருக்கிறார்கள். கெட்டவர்கள் அவ்வாறு ஏமாறுவதில்லை.

- மு.வ

## வாசகர் உள்ளம்

### உனக்கேது அமாவாசை?

இதய நாளிதழே!
இலைகள் உதிர்த்து - நீ
பட்டமரமாய் இருக்கவில்லை
இலைகள் உதிர்ந்து - நீ
இலையுதிர் காலத்தில் இருந்தாய்
உனக்கது இலையுதிர் காலம்! - வாசகர்
நமக்கதுவே கிளையுதிர் காலம்!!
பத்திரிகையும் ஒரு வகையில்
காதலிதானாம் - இரண்டுமே
குறித்த நேரத்தில் வராவிட்டால்
வந்துவிடுமாம் மாரடைப்பு
மாரடைத்து இருந்தோம் இன்று உன்
ஒட்டுமொத்தத் துளிர்ப்பில்
உன்னில் வந்து
கூடுகட்டிக் கூவிக்கொள்கிறோம்.
துணியைக் கத்தரிப்பார் உண்டு.
துணிந்து சூரியக்கதிரைக்
கத்தரிப்பவர் உண்டா? - சூரியன்
முகில்களின் படை எடுப்பில்
மூடியிருந்தால் - அதை
அஸ்தமனம் என்று அர்த்தம் கொள்வதா?
கோடிக்கணக்கான குடைகளைக்
கண்டவிடத்தும்
சூரியன் ஒருபோதும்
சுருங்கி ஒளிவதில்லை
நீ, சூரியன்
உனக்கேது அமாவாசை?

*என். தனுசுஜன், சண்டிலிப்பாய்.*

### பரவட்டும் பாரெல்லாம்

பல்கலைக் கழகத்தில் பகிடிவதை புரியும்
பாவியரை மாணவராக்க யாரெல்லாம்
பகிரங்கப் படுத்தி பாடுபட்ட சிலருள்
பாராட்டுக்குரியவன் உதயன்(நீ)
பாதியில் உன்பணிக்கு தடை வந்ததால்
பதைத்தோம் பல்கலை மாணவர்நாம்.
பார்த்திருந்தோம் உன்வரவை நித்தம் நித்தம்
பவனியாக வருகின்றாய் மீண்டும் - நீ
பரவசமோ எல்லையில்லை பல்கலை மாணவர்க்கு
பகிடி வதையை ஒழித்திட மீண்டும் நீ பாடுபட்டு
பாதகரின் இழிசெயலைப் பல்கலையில் நீக்கிவிடு
பரவட்டும் உன்பணி பாரெல்லாம் என்றென்றும்!

*இரண்டாம் வருட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்.*

### உன் பணி தொடர்க!

மீள் வரவு கண்ட உதயனே
எதிர் காலத்தில் உன் சேவை
தடங்கலின்றி தொடர
எனது வாழ்த்துக்கள்.

*மாதொருபாகன், வல்வெட்டித்துறை*

## ஒரே மாதத்தில் மூன்று கிரகணங்கள்

2000 ஆண்டு ஜூலை மாதத்தில் மூன்று கிரகணங்கள் நிகழவுள்ளன. இவ்வாறு ஒரே மாதத்தில் மூன்று கிரகணங்கள் நிகழ்வது மிகவும் அபூர்வம்.

ஏற்கனவே கடந்த முதலாம் திகதி(01.07.2000) சனிக்கிழமை பார்சுவ சூரியகிரகணம் நிகழ்ந்திருக்கிறது. இது இலங்கையில் தோன்றவில்லை.

எதிர்வரும் 16-07-2000 ஞாயிற்றுக்கிழமை பூரண சந்திரகிரகணம் நிகழவுள்ளது. இது இலங்கையிலும் தென்படும். கிரகணம் பற்றிய படியே சந்திரன் உதயமாகும். இரவு 7.04 மணி தொடக்கம் 8.51 வரை(புதிய நேரம்) சந்திரன் முற்றாக பூமியின் நிழலால் மறைந்து காணப்படும். இது இந்துக்களுக்கு ஆடிப்பிறப்புத்தினமும் ஆகும்.

31-07-2000 திங்கட்கிழமை (ஆடி அமாவாசை விரதத்திற்கு மறுதினம்) பார்சுவ சூரிய கிரகணம் நிகழவுள்ளது. இக்கிரகணமும் இலங்கையில் தென்படாது.

(தகவல்: வை. மகாதேவன் கொழும்புத்துறை.)



# மல்லாகம், கோட்டைக்காடு சா

# சித்திரத் தேர் வெள்ளோ

14-02

## நல்லைக் குருவின் அருளாசிச் செய்தி

மல்லாகம் சாளம்பை பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டு மனநிறைவடைகின்றோம். பழமையும் பெருமையும் வாய்ந்த முருகப்பெருமானுடைய ஆலயம் இங்கு வாழும் மக்களினுடைய பக்தி நெறியைப் பேணுவதற்கும் பண்பாட்டு விழுமியங்களில் வாழ்வதற்கும் இவ்வாலயம் தன்னாலான பணிகளை செய்து கொண்டிருக்கிறது.நாங்கள் வாழும் யுகம் கலியுகம். இந்த யுகத்திற்கு வழிபாட்டுத் தெய்வமாக இருப்பவர் முருகப்பெருமான். முருக வழிபாடு இம்மைக்கும், மறுமைக்கும் நற்பயனைத் தரக்கூடியது. முருகனை வழிபடும் அடியவர்களுக்கு வேண்டிய வரத்தைக் கொடுக்கக் கூடியவன். இந்தப் பெருமானுக்கு அமைந்திருக்கும் தேர் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அதனால்தான் எல்லோரும் தேரினுடைய வடத்தைப் பிடித்து இழுப்பது வாழ்வினில் தேர்ந்து கொள்வது போலாகும். இதனால்தான் தேர்த் திருவிழா. என்றால் திருவிழாக்காலங்களில் வெகு சிறப்பாகவும், முக்கிய இடத்தையும் வகிக்கிறது. இத்தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞர்களையும், அறவழி நின்று பரிபாலனம் செய்யும் சபையினரையும் மல்லாகம் வாழ் மக்களையும் .இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு "

**- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர**

**தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்**

## வல்வினை வேரறுக்க வா!

சாளம்பைப் புனித பதியிலே கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முருகப் பெருமானுக்கு சித்திரத்தேர் பெருவிழாவுக்கெனப் பெரும் பொருட்செலவுடனும் அரிய சிற்ப சித்திர வேலைகளுடனும் கூடியதாய் நிர்மாணிக்கப்பட்ட அழகிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நன்னாளில் வல்வினையை வேரறுக்க விரைந்து தேரேறி வருக வேலா என வேண்டுதல் செய்து இவ்வரிய பணி சிறப்புடன் விளங்க அரும் பணியாற்றிய அனைத்து முருக அடியார்களின் வாழ்வு மலரவேண்டுமெனவும் என் அப்பன் சாளம்பை வேலவரை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

*தலைவர்,*
*வலி.வடக்குப்பிரதேச சபை*
*காங்கேசன்துறை,*
*மல்லாகம்.*

**சிவானந்த வாரிதி**
**சிவத்திரு**
**வ.குமாரசாமி ஐயர்.**

## ஸ்தபதியாரின் ஆசிச் செய்தி



முருகப் பெருமான் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் அற்புதமான ஆலயங்களில் ஒன்றாக மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகப் பெருமான் அவ்வூர் மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.பக்தியும் பண்பாடும் வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்துக்கு அழகிய தேர் ஒன்றினை நிர்மாணித்தல், அதன் திருப்பணிக்கு உதவுதல், அதனை முருகப் பெருமானுக்கு பக்தி பூர்வமாக அர்ப்பணித்தல் போன்ற பங்கினை "ஊர் கூடி தேர் இழுத்தல்"என்ற உயர் தத்துவத்தின் படி எமக்கு இந்தத் திருவருள் கூடி முருகப் பெருமானுக்கு ஒரு சித்திர, சிற்பத் தேர் செய்யும் வாய்ப்பினைப் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

வெள்ளோட்டம் காணும் தேரினை அமைப்பதற்கு உதவிய சிற்பக் கலைஞர்களுக்கும்,ஆலயபரிபாலன சபையினருக்கும்,தேர்த்திருப்பணிச் சபையினருக்கும் மற்றும் மக்களின் உதவியினாலும் இத்திருப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய சித்திர சிற்பத்தேரில் முருகப் பெருமான் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்து மேன் மேலும் இவ்வாலயம் வளர்ச்சியடையச் செய்வார் என்ற ஆசியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாபூஷணம் சு. இராசரத்தினம்,**
**விநாயகர் சிற்பாலயம்,**
**திருநெல்வேலி.**

## சித்திரத் தேரேறும் சிங்கார வேலவன்

நிறை கடல் மண்ணும் விண்ணும் நீண்ட வானுலகமெல்லாம் குறைவறக் கொடுக்கும் கதிர்வேற் பெருமான் ஐம்பத்தாறு கோடியடியார்கள் நடுவே ஆனந்தமாய் அதிசயத் தேரேறி அருள்பாலிக்க வருகின்றார்.கற்றவர் போற்றிடும் கந்தவேள்-கதிர்காமப் பெருமான் மற்றவர் அறியாமல் மாணிக்க மலை தனை விட்டுச் சாளம்பை முருகனாய் ஆலமரங்கள் அடர்ந்த சோலையில் அழகர் சுவாமி வடித்த வடிவேலழகனாய் ஆண்டாண்டு தோறும் அதிசயமாய்ப் பொலிவுற்று ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி மண்ணோர் துதித்திட வண்ணத் தேரேறி வாட்டமில்லா வடிவழகனாய் மக்கள் குறை தீர்க்க அசைந்து அசைந்து வருகின்றார். கண்குளிரக் கண்டு போற்றித் துதிப்போம்.

**ஐ.பாலசிங்கம்,**
*உபஅதிபர். யா/ஏழாலை மகாவித்தியாலயம்.*

## அரச அதிபரின் ஆசிச் செய்தி

ஈழவள நாட்டினது வரலாற்றுடன் தோன்றியது எமது சமூக, சமய வரலாறு. இதனை வரலாற்றுச் சான்றுகள் நன்கு பகர்கின்றன. அதன்வழி நின்று அவனருள் பெற்று ஆக்கங்கள் பல புரிந்து அருள் தொண்டாற்றியோர் அனேகர்.

அவ்விதம் அவனருள் பெற்ற அழகர் சுவாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதுதான் சாளம்பை முருகமூர்த்தி ஆலயம். இவ்வாலயம் மதிநுட்பம்மிக்கவர்களும், இறைபக்தி கொண்டவர்களுமான ஒரு சில பக்தர்களின் உதவியுடன் கல்வி வளம் மிக்க மல்லாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று பல அன்பர்களின் துணைக்கொண்டு பரிவார மூர்த்திகளையும் கண்டு விழாக்களினால் சிறப்புப் பெற்று மிளிர்கிறது.இவ்வருடம் கருணைக்கடலாம் கந்தன் அருள் கண்ட பக்தர்களின் துணையால் சித்திரத் தேரில் பவனி வரவுள்ளான் அந்த வேலன்.அது கேட்டு நானும் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

"எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதல்லால்
வேறொன்றறியேன் பராபரமே"

**திரு.க.சண்முகநாதன்**
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

*கச்சேரி,*
*யாழ்ப்பாணம்.*

## பதசுகம் தருவாய் போற்றி!

பொன்னுயர் மல்லாகத்தில்
பொலியும்சா ளம்பை என்னும்
நன்னெறிப் பதியில் வாழும்
ஞானநா யகனாம் வேலன்
முன்னிய தேரில் வீதி
முன்வரத் தொண்ட ரெல்லாம்
மன்னிய சேவை செய்து
வகுத்தனர் நவமணித் தேர்

தேரிலே முருக மூர்த்தி
திருக்கொலு வமர்த்தும் தொண்டர்
சீரிய செல்வ மெல்லாம்
சிறப்புறச் சுகங்க ளெல்லாம்
பாரினில் செழித்து ஞானப்
பழம்பொருட் கருணை பொங்கி
தாருயர் கற்பகம் போல்
சந்ததம் வாழி வாழி

அன்புயர் அழகர் சாமி
ஆதியில் கதிர் காமத்தின்
இன்புயர் வேலி தென்றே
இங்குன்னை தாபித் தானிப்
பொன் பெறும் உத்தரத்தில்
பூசனை செய்ய நின்றாய்
மன்பதை, காக்கும் கந்தா
வந்தருள் புரிவாய் போற்றி

அணிகதிர் காமம் நின்றாய்
அடியனுக் காக வந்தாய்
பிணியொடு துயரம் நீக்கும்
பெருமானே முருகா உன்னை
மணிதரும் தேரிற் கண்டு
மனநிறை வெய்த வந்தெம்
பணிதனை ஏற்று ஞானப்
பதசுகம் தருவாய் போற்றி.

அருட்கவி
**சீ.விநாசித்தம்பி**



## வடம்பிடிக்

வலி. வடக்கில் மல்லாக
பைப் பதியில் முருகப்பெரு
எழுந்தருளி மக்களுக்கு கரு
வழங்கி வருகிறார். இங்கு
நிகழ்வுகளிலும் பங்கு பெறு
றேன். பரிபாலன சபை உ
மெய்யடியார்கள் அனைவர்
திருப் பணி நிறைவேற்று வெ
ரத்தில் எங்களையெல்லாம்
தியின் திருவருளால் இத்தி
ளும், ஆலயக்குருக்கள், ஆ
ஊர்மக்கள் அனைவருக்கும்
என்றென்றும் கிடைக்க வே
னின் பாதங்களை வணங்கி
கொள்கிறேன்.

**சிவஸ்ரீ இ.சுந்தரே**
*பிரதம சிவாச்சாரியார், ஸ்ரீ து*

## பரிபாலன சபை செய்

சிங்கார வேலவன் சித்தி
கும் காட்சியினைக் கண்குளி
நீண்ட நாட்கள் கண்ட கன
யிட்டுப் பெருமகிழ்ச்சியடைகி
தேரை உருவாக்க செம்பொரு
வள்ளல்களுக்கும் பக்தியுட
நெறியாளர்களுக்கும் எனது
தோடு அவர்கள் எம்பெரும
கீர்த்தியும் குறையாத செல்
வாழ்வு வாழ்வார்களாக.

**இ.ஆனந்தன்** *(ஆலய பரி*


**தனுஷியா களஞ்சியம்**
மயிலங்காடு, சுன்னாகம்.
*உரிமையாளர்:* ஐ. நற்குணராஜா

**லக்ஷ்மி ரான்ஸ்போட் சேவிஸ்**
கோட்டைக்காடு, மல்லாகம்.
*உரிமையாளர்:* வே. ஜெயக்கொடி

**நிசி அச்சகம்**
76, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

**சசிக்குமார் நகையகம்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்.
35,கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
உள்ளூர்: 070 - 212551
வெளியூர்: 0094-70 212551

**துயா மரக்காலை**
கே. கே. எஸ். வீதி - சுன்னாகம்
*உரிமையாளர்:* ச. கந்தசாமி.

**ஈஸ்வரி மரக்காலை**
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.
*உரிமையாளர்:* வே. உதயகுமார் (தம்பி)

**பிரியங்கா**
*பந்தல் சேவை. தொலைத்தொடர்பு சேவை. வீடியோ சேவை*
மயிலங்காடு, சுன்னாகம்.
T. P 070 - 212992

**துவாரா**
931/12 பிறின்ஸ்வீதி
T.P: 331304
454146 இல. 22,
FAX: 331304

தரமான தங்க நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்
**சாருகா ஜுவல்லர்ஸ்**
இல. 200 G, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:- வி. ஜெயசீலன்

**திரியாம்பாள் ரான்ஸ்போட் சேவிஸ்**
கோட்டைக்காடு, மல்லாகம்.
*உரிமையாளர்:* வி. தர்மகுலசிங்கம்.

**அம்மன் ஸ்ரோர்ஸ்**
இ. தர்மதுரை (முருகா)
குப்பிளான் வீதி, மயிலங்காடு.

மின் இணைப்பு
பிளம்பிங் சே
ஆகியவற்றுக்கு
நா.சூரிய
கோட்டைக்காடு

**நியூ ஜெயா தொலைத் தொடர்பு சேவை**
தொலைபேசி வசதிகள், பக்ஸ் (FAX) வசதிகள், போட்டோப் பிரதிகளுக்கு,
173, அரசடி வீதி, நல்லூர்.
T.P. FAX: 021-2922

*சாளம்பை முருகன் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.*
கோட்டைக்காடு, மல்லாகம்.
பொ. கதிரவேலு (குடும்பம்)

**நிதர்சன்**
**வீடியோ சென்ரர் திரையரங்கு**
மயிலங்காடு, சுன்னாகம்.

**நடேச**
**பல்பொருள்**
கோட்டைக்காடு, மல்லாகம்.

**விக்கி பற்றிசார்ஜ் அன் ஒலி/ஒளி சேவை**
கோட்டைக்காடு, மல்லாகம்.
*உரிமையாளர்:* S. விக்கினேஸ்வரதாசன்

*சிவதாஸ் மர அரிவு சாலை*
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
*லக்ஷ்மி சினிமா*
பாழ்வீதி, இணுவில்.
*உரிமையாளர்:* இ. சிவலிங்கம்.

*தாரகை கல்வி நிலையம்*
களபாவோடை, ஏழாலை.

*வரத மணவை*
சூராவத்தை,
*உரிமையாளர்:*

# ாளம்பை முருகமூர்த்தி ஆலய
# ாட்ட விழாச் சிறப்பு மலர்

-07-2000





## துர்க்கா துரந்தரியின் ஆசிச்செய்தி

"கலியுகவரதன்" என்று பக்தர்களால் போற்றப்படுபவர் முருகப்பெருமான். கலியுகம் என்பது தீயோரைக் கிளர்ச்சி பெறச் செய்து நல்லோரை அடக்கி வாழ வைக்கின்ற ஒரு யுகமாகும். என்றாலும் முடிவிலே நீதிக்கும் உண்மைக்கும் வெற்றி கொடுக்கின்ற ஒரு யுகமும் இதுவேயாகும். பாஞ்சாலி சபதத்திலே தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும் என்று பாடியுள்ளார் சுப்பிரமணிய பாரதியார். இக்காலச் சூழ்நிலையில் நாம் தஞ்சமடைய வேண்டிய இடம் திருக்கோயில்களே ஆகும். இவற்றை நித்திய, நைமித்திய விழாக்களினால் அருள் நிலையை எழுச்சி பெற வைக்கவேண்டியவர்கள் நாங்கள். மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி கோயில் பக்திப் பரவலினாலும் திருப்பணிச் சிறப்பினாலும் எழுச்சி பெற்ற ஓர் ஆலயமாகும். இத் திருப்பணியை நிறைவேற்றிக் கொடுத்த ஸ்தபதியார் உயர்திரு. இராசரத்தினம் அவர்களுக்கும் அவருடைய குழுவினருக்கும் எங்கள் வணக்கத்தையும் வாழ்த்தையும் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முருகப் பெருமானின் அருளினால் எல்லா நிகழ்வுகளும் சிறப்பாக அமைய வேண்டுமென்று பிரார்த்தித்து சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினரையும் பாராட்டி அமைகின்றேன்.

**- கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை, இலங்கை.*

## மல்லாகத்தின் பேரொளி மேலும் வளர்க!

ஔவைக்குபதேசம் செய்த முருகன் அப்பன் சுவாமி மல்லாகம் பதியில் குடிகொண்டு மக்கள் துயர்களையும் வேலவனாய் சாளம்பை முருகமூர்த்தியென நாமம் பூண்டு நல்லாரை வாழவைக்க வந்துதித்த பெரும் கருணைக்கடல். அன்னவருக்கு தேர் வெள்ளோட்டம் காணவிருப்பது அடியார்க்கு மனமகிழ்வே. பவளவிழாக் காணும் ஆலயம் கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என அகச்சான்று நெருட அழகர் சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. 75 வருடங்களாக வளர்ந்து மயிலேறும் பிரான் உலகவலம் வந்ததுபோல வடபால் பெருமையுடன் எழுச்சி கண்டிருக்கிறது.

ஏகன், அனேகன், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கருத்துக்கள் பொலிய மல்லாகம் வாழ் மக்களால் தங்கள் சமூகம் தழைக்க, சாத்வீகம் மலர எழுந்த ஆலயத்தில் பரிவார மூர்த்திகளாய் முட்டறுக்கும் விநாயகனும், பொன் கொழிக்கும் லக்குமி, காவற் தெய்வம் வைரவனும், நவகோள்களும் வீற்றிருப்பது தனி அழகு.

சித்திரப்பத்தியில் தேவர் சென்றனர் என்பது கம்பன் கவியமுதம். இங்கு சித்திரத்தேரில் சிவனார் புத்திரன் ஊர்திவர இருக்கிறார். அந்நேரம் பக்த கோடிகள் சித்திரப்பத்தியில் சித்தம் மகிழ்ந்து சிந்தை நெக்குருகி அவன் தாழ் பணிவார்களாக அன்னவரைச் சிக்கெனப் பிடித்தோர் வாழ்வு மலரும். சமூகக் கோயில்களில் நித்திய பூஜையும் நேர்த்தியும் கொண்டு முன்னணியில் நிற்பது இக் கோயிலாகும். கடந்த பத்து ஆண்டுகளில் துரித வளர்ச்சி கண்ட ஆலயம் வீணாகானபுரத்து மாண்புமிகு மல்லாகத்தின் பேரொளியே மேலும் வளர பக்த கோடிகள் உள்ளம் விரிவடைய விமலனை வேண்டுகிறேன்.

**கோ. சி. வேலாயுதம்,**
*முன்னாள் கல்விப்பணிப்பாளர்,*
*'வலம்புரி'*
*பிரதம ஆசிரியர்.*

## ஸ்தாபகர் அழகர் சுவாமி அவர்களின் பேர்த்தியின் ஆசியுரை

கோட்டைக்காடு என்னும் பழமை வாய்ந்த பகுதியில் அப்பகுதி வாழ் மக்களுக்கு எல்லையற்ற அருளாட்சியோடு எழுந்தருளியிருந்து அருளை வாரி வழங்கும் சாளம்பை வேலாயுதப் பெருமானுக்குப் பல இலட்சம் ரூபா செலவில் பரிபாலகர்களும் அடியார்களும் சேர்ந்து சித்திரத்தேர் ஒன்று உருவாக்கியதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன் ஆலயங்களை முன்னோர் அமைத்து வைத்தாலுங்கூட காலத்துக்குக் காலம் வேண்டிய திருப்பணிகளைச் செய்து தேவையானவற்றைப் புதிதாக அமைத்து குறைவற நிகழ்த்துவதன் மூலம் இறைவனின் அருட் பெருக்கு அப்பகுதி வாழ் மக்களுக்கு எல்லையற்றுப் பெருகும். இந்த வகையில் புதிதாக அமைத்துதவிய சித்திரத் தேரேறும் சாளம்பை முருகப் பெருமான் இடையறாது தொண்டுபுரியும் ஆலய பரிபாலகருக்கும் ஏனைய அடியார்களுக்கும் அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி லோகநாயகி இரகுபதி**
*ஆலய ஸ்தாபகர்,*
*அழகர் சுவாமிகள் அவர்களின் பேர்த்தி.*

## பிரதேசசபைத் தலைவர் ஆசியுரை

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன்னர் முருகபக்தர் ஆகிய அழகர் சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர் கதிர்காமத்திலிருந்து இந்தச் சக்திவாய்ந்த வேலாயுதத்தை கதிரமலைக்கந்தனின் திருவருளால் கிடைக்கப்பெற்று இவ்வாலயத்துள் பிரதிஷ்டை செய்து இவ் வேலாயுதத்தை மூலமூர்த்தியாக அமைத்து ஸ்தாபித்த ஓர் ஆலயமாகும்.

இவ்வாலயம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக திருமுருகன் அருள்பாலிக்க கோட்டைக்காடு, களவாவோடை, சூராவத்தை, மயிலணி வடக்கு கிரா மக்கள் எல்லோரும் ஒன்று கூடி ஒரு சக்தியுள்ள முருகன் ஆலயமாக மேலோங்கி வளர்ச்சியடைந்துள்ளது. ரூபா 25 லட்சம் செலவில் ஓர் அழகிய சித்திரத் தேரை அமைத்துள்ளார்கள். இச்சித்திரத்தேர் வெள்ளோட்டத் தினத்தில் இத் தொகுதி மக்களுக்கு சாளம்பை முருகன் பிரசன்னமாகி அருள்பாலிக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**தி. மா. செல்வராசா (ஜே. பி. யு. எம்.)**
*தலைவர், வலி.மேற்கு பிரதேச சபை*

## நல்லருள் கிடைக்கட்டும்!

ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் ஒருங்கே இணைந்து நாற்புறமும் சோலைகள் நடுவே கோயில் கொண்டு அருள்பாலிக்கும் பொருட்டும் தேவர்களின் துயர் தீர்க்கும் பொருட்டும் வடிவும், முடிவும் இல்லாத பரம்பொருள் மூவிரு முகங்களும் ஆறிருபுயங்களும், ஈராறு நேத்திரங்களும், மூவாறு நயனங்களும் அமைந்த திருமேனி கொண்டு ஆறுபடை வீட்டுக்கு அதிபன் ஆறுமுகப் பெருமான். இன்று கோட்டைக்காடு சாளம்பை பதியில் அமர்ந்து அருளாட்சி செய்துவரும் முருகப்பெருமானுக்கு ஓர் அழகிய சித்திரத்தேர் பூர்த்தியாகி வெள்ளோட்ட விழா காணும் பொருட்டு அமைந்துள்ளது.

சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா சிறப்புற நடைபெற்று இவ்வூர் வாழ் முருகப்பெருமானின் அடியவர்கள் அனைவருக்கும் இறைவனின் நல்லருள் எல்லோருக்கும் எப்பொழுதும் என்றென்றும் கிடைக்க நல்லாசிகள் உரித்தாகுக.

**செ. ரவிச்சந்திரக் குருக்கள்**
*(ஆலயப் பிரதம குரு)*

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

**செ. தியாகராஜசர்மா**
*(அர்ச்சகர்)*

## பரிபாலன சபைக் காப்பாளரின் செய்தி

வணக்கத்துக்குரிய அழகர் சுவாமி அவர்களால் இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், நான் பிறந்து தவழ்ந்து விளையாடிய தாயக மண்ணில் இந்த முருகன் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டதை எண்ணும் பொழுது எனதுள்ளம் பக்தியால் பரவசமடைகின்றது.

இந்த ஆலயம் கடந்த இருபது வருடகாலத்தில் பாரிய வளர்ச்சி அடைந்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. ஒவ்வொரு காலகட்ட வளர்ச்சியிலும் என்னாலான பங்களிப்பைச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கிய ஆலய பரிபாலன சபையினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

பல நூறு மைல்களுக்கு அப்பால் நானும் எனது குடும்பத்தாரும் வாழ்ந்தாலும் எனது மனக்கண்ணில் அந்த "வேல்" தினமும் நிழலாடிக்கொண்டேயிருக்கும். உங்கள் எல்லோருடனும் இணைந்து முருகன் சித்திரத் தேரேறி பவனி வரும் கண்கொள்ளாக் காட்சியினை அகக் கண்ணில் கண்டுகளிக்கிறேன்.

*கமால் சன்ஸ்,*
*காலி வீதி,*
*கொழும்பு.*

**பொன். கந்தசாமி**
*(பரிபாலன சபைக் காப்பாளர்)*

## பிடிக்க வாரீர்!

ல்லாகம் கோட்டைக்காடு சாளம்
கப்பெருமான் கோயில் கொண்டு
கு கருணை செய்து தன்னருளை
இங்கு நடைபெறும் திருப்பணி
பெறும் வாய்ப்புக்களையும் பெற்
ப உறுப்பினர்கள், ஊர்மக்கள்,
னவர்களினதும் உதவிகளினால்
று வெள்ளோட்டம் ஓடும் இந்நே
ல்லாம் காத்தருளும் இறைசக்
இத்திருப் பணியில் பங்குகொள்
ள், ஆலய பரிபாலன சபையினர்,
நக்கும் முருகப்பெருமானின் அருள்
க வேண்டும் என்று எம்பெருமா
பணங்கி நல்லாசிகளைக் கூறிக்

**ந்தரேஸ்வரக் குருக்கள்.**
*, ஸ்ரீ தர்க்காதேவி தேவஸ்தானம்.*

## சபைத் தலைவரின் செய்தி!

சித்திரத் தேரேறி அருள்பாலிக்
ண்குளிரக் காணவேண்டும் என்று
கனவு இன்று நனவாகின்றதை
யடைகின்றேன். இந்தச் சித்திரத்
ம்பொருள் கொடுத்துதவிய தர்ம
க்தியுடன் கண்டுகளிக்கும் அற
எனது நன்றியைத் தெரிவிப்ப
ம்பெருமான் அருளால் தாழாத
செல்வங்களும் பெற்றுப் பெரு
க.

*லய பரிபாலனசபைத் தலைவர்.)*


ாரகாஸ்
ஸ்வீதி, கொழும்பு 11.
இல. 22, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

ணப்பு வேலைகள்,
ங் வேலைகள்
ற்றுக்கு நாடுங்கள்
சூரியகுமார்
க்காடு, மல்லாகம்.

டேசன்
நள் வாணிபம்
உரிமையாளர்:
ந. தர்மகுலசிங்கம்
(புண்ணியமூர்த்தி)

ரதன்
ஷ சேவை
சுன்னாகம்.
ாளர்: சி. வரதன்

சர்மிலா
தொலைத்தொடர்பு சேவை
ஏழாலை தெற்கு, மயிலங்காடு.
T.P 070 - 212552
070 - 212766

நிரோஸ்
அந்தியகால சேவை
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்
உரிமையாளர்: இ. துரைராஜா

துரை வெதுப்பகம்
சூராவத்தை, சுன்னாகம்.
உரிமையாளர்: வே. ரவிகாந்தன்

முகுந்தன்
கொமினிக்கேஷன்
மயிலணி-வடக்கு சுன்னாகம்.
உரிமையாளர்: ஐ. செல்வம்
(T.P No: 070 - 212744)

ராஜன் பெயின்ரிங் வேக்ஸ்
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
உரிமையாளர்:
சி. பகிதரன் (ராஜன்)

ஜமுனா சவுண்ட்ஸ்
கோட்டைக்காடு, மல்லாகம்.
ஒலி, ஒளி அமைப்பாளர்
அ. இரத்தினசிங்கம்.

வேணு மினி பஸ் சேவை
கோட்டைக்காடு, மல்லாகம்.
உரிமையாளர்: சி. இன்பராஜா.

ஸ்ரீசந்தி விநாயகர் கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி, - மல்லாகம்.

அனுரா வீடியோ விஷன்
கே. கே. எஸ். வீதி - சுன்னாகம்.
உரிமையாளர்: செ. மகேனா.

சுந்தரவேல் வைத்தியசாலை
நீதிமன்ற வீதி, மல்லாகம்.
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
Dr. ச. சுந்தரேஸ்வரன்.

நிர்மலா வைத்தியசாலை
கோட்டைக்காடு - மல்லாகம்
Dr. பழனி நிர்மலா.

தபோதரன்ஸ்
கண்ணாடி, அலுமினியம், போட்டோ பிறேம் தளபாடத் தொழிலகம்.
இல. 57, கே. கே. எஸ். வீதி - சுன்னாகம்.

டிலெக்ஸ்
எலெக்றிக்கல்ஸ் எலக்றோனிக்ஸ்
ரெலிக்கொமினிக்கேஷன்ஸ்
50, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

காந்தி சைக்கிள் வேக்ஸ்
மயிலங்காடு, சுன்னாகம்.

துர்க்கா ஸ்ரோர்ஸ்
மயிலங்காடு, சுன்னாகம்.
உரிமையாளர்: க. மணிவண்ணன் (ராசன்)

ராஜ்குமார் பல்பொருள் வர்த்தக நிலையம்
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.
கிளை: பிரதான வீதி, சுன்னாகம்.

# கண்டி எசல பெரஹறவை ஒட்டி அங்கு பாதுகாப்பு தீவிரமாக்கப்படும்

## 17 ஆயிரம் பொலீஸார் கடமைக்கு

கொழும்பு,ஜூலை14

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி எசல பெரஹறவின் போது கண்டியில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 7 ஆயிரம் பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இம்மாதம் 31ஆம் திகதி முதல் ஒகஸ்ட மாதம் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த பெரஹறவைச் சிறப்பாக நடத்துவது தொடர்பாகவும் கண்டிக்கு வரும் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக கண்டி மாவட்டச் செயலாளர் தலைமையில் செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய மாகாணப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கண்டி நகருக்கான அம்பிட்டிய, பேராதனை, கெட்டம்பே, கட்டுகஸ்தோட்டை போன்ற நுழைவாயில் பகுதிகளில் இராணுவத்தினரும் பொலீஸாரும் கூட்டாக விசேட வீதிச் சோதனைக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். இச்சோதனையின் போது கண்டி நகருக்குள் பிரவேசிக்கும் அனைத்து வாகனங்களும் பொதிகளும் கடும் சோதனைக்குள்ளாக்கப்படும்.

இதேவேளை -

பெரஹற நடைபெறும் சமயத்தில் நகரில் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் வகையில் குடியிருப்பாளர்கள், வர்த்தகர்கள், ஓட்டோ சாரதிகள் மற்றும் வாகனச் சொந்தக்காரர்களுக்கு விசேட ஆலோசனைகளும் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் ஹேரத் தெரிவித்தார்.

# சர்வஜன வாக்கெடுப்பு 5 வருடங்களின் பின்னரே!

கொழும்பு,ஜூலை14

வடக்கு - கிழக்குப்பிராந்திய சபை உருவாக்கப்பட்டு, ஐந்து வருடம் முடிவடைந்த பின்னர் வடக்கும், கிழக்கும் இணைவது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கான பிரகடனத்தை ஜனாதிபதி விடுப்பார். சூழ்நிலையைப் பொறுத்து வருடாவருடம் இந்தப் பிரகடனம் புதுப்பிக்கப்படும்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசுக்கும் - ஐ.தே. கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இணக்கம் காணப்பட்ட சில விடயங்கள் வருமாறு:-

★ நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் இந்த இடைக்கால நிர்வாகசபை நிறுவப்படும். சபைக்கும் ஆளுநருக்கும் உள்ள அதிகாரங்களும் இந்த சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்டிருக்கும்.

★ இடைக்கால நிர்வாகசபையின் உறுப்பினர்களை ஜனாதிபதியே நியமிப்பார். இன நெருக்கடியில் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள், சுய விருப்பின் பேரில் இந்த சபையில் உறுப்புரிமையைப் பெறமுடியும்.

★ 1988இல் வட-கிழக்கு மாகாண சபைக்கு இருந்த அதே எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்டதாகவே இந்த இடைக்கால நிர்வாகசபை இருக்கும். மாவட்ட உறுப்பினர் தொகையும் அதே அளவிலேயே இருந்து வரும். இந்த இடைக்கால நிர்வாகசபையின் மத்தியசபை முதலமைச்சர்கள், இரண்டு பிரதி முதலமைச்சர்கள், ஆறு அமைச்சர்களைக் கொண்டதாக இருக்கும்.

★ சபையிலுள்ள அணித் தலைவர்களில் கூடுதல் ஆதரவு உள்ளவரை ஆளுநர் முதலமைச்சராக நியமிப்பார்.

★ இரண்டு பிரதி முதலமைச்சர்களையும் ஆளுநரே நியமிப்பார். முதலமைச்சர் சாராத இனத்தவர்கள் மத்தியிலேயே இவர்களை அவர் நியமிப்பார்.

★ நியமிக்கப்படும் ஆறு அமைச்சர்களில் ஒருவர் அந்த பிரதேசத்தில் இரண்டாவது பெரும்பான்மையாக உள்ள இனக்குழுக்களின் பிரதிநிதிகளிலிருந்து நியமிக்கப்பட்டவராவார்.

★ முதலமைச்சர் பிராந்திய திட்டங்களை வரைதல், நிதி, சட்ட ஒழுங்கைப் பேணுதல், பொது முதலீடுகளிலேயே நிர்வாகிகளுக்குப் பொறுப்பாக இருப்பார்.

★ இரண்டாவது பெரும்பான்மை இன உறுப்பினர் மத்தியிலிருந்து நியமிக்கப்படும் 2 ஆவது பிரதி முதலமைச்சருக்குரிய பொறுப்புகளாக சுகாதாரம், சமுகசேவைகள், புனர்வாழ்வு முஸ்லீம் கலாசாரம் என்பன ஒப்படைக்கப்பட்டிருக்கும்.

★ இரண்டாவது பிரதி முதலமைச்சர் புதைபொருள்கள், நூதனசாலை, பௌத்த கலாசாரம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வீடமைப்பு, நகர அபிவிருத்தி என்பவற்றுக்கு பொறுப்பாக இருப்பார்.

★ ஏனைய அமைச்சர்களுக்கான பொறுப்புக்களை முதலமைச்சர் தெரிவு செய்து ஒதுக்குவார்.

★ இடைக்கால நிர்வாக சபைக்கான சபாநாயகர் தெரிவு, சபையின் நிலையியற் கட்டளையை அங்கீகரித்தல், சமயம், பிராந்தியங்களில் வாழும் பிற இனக் குடியிருப்பாளர்களின் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு என்பவற்றுக்கு சபையின் பெரும்பான்மை அங்கத்தவரின் விருப்பை மட்டுமல்ல, ஏனைய சமுக உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் விருப்பையும் பெற்றிருக்கவேண்டும்.

★ முதலமைச்சர்கள் மாநாடு நடைபெறும்போது இடைக்கால நிர்வாகசபையின் முதலமைச்சர்கள் மட்டுமல்ல மற்ற இரு பிரதி முதலமைச்சர்களும் அந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்கு அதிகாரமுடையவர்களாக இருப்பர். ஆனால் வாக்களிக்கும் உரிமை இருக்கமாட்டாது.

★ இடைக்கால நிர்வாகசபையின் பதவிக்காலம் 5 வருடத்துடன் முடிவடைந்ததும் அடுத்த மூன்று மாத கால எல்லைக்குள் வடகிழக்கை உறுதிப்படுத்முகமாக கிழக்கில் சர்வ... வாக்கெடுப்பு நடைபெறும்.

★ இணைப்பை ஆதரித்து கிழக்கு மாகாண மக்கள் தீர்மானித்தால் அதன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாண பிராந்தியசபை ஸ்தாபிக்கப்பட்டு அதற்கான தேர்தல் நடத்தப்படும்.

★ இணைப்பு யோசனை நிராகரிக்கப்பட்டால் வடக்குக்கும் கிழக்குக்கும் தனித்தனி பிராந்தியசபைகள் உருவாக்கப்படும்.

★ கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கான பிரகடனத்தை ஜனாதிபதி பிறப்பிப்பார். வருடா வருடம் இந்தப் பிரகடனம் புதுப்பிக்கப்படும். (இ-3)

## நகல் அங்கீகாரம் பெற்றதும்

# இரண்டு பிரதி ஜனாதிபதிகளை நாடாளுமன்றம் தெரிவுசெய்யும்

உத்தேச நகல் அரசமைப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகாரத்தைப் பெற்றதும் இரு பிரதி ஜனாதிபதிகளை நாடாளுமன்றம் வாக்கெடுப்பு மூலம் தெரிவுசெய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு பிரதி ஜனாதிபதிகளும் இரட்டைப் பெரும்பான்மை முறையில் தெரிவுசெய்யப்படுவர்.

முதலில் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை மூலமும் பின்னர் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின பெரும்பான்மை வாக்குகள் மூலமும் பிரதி ஜனாதிபதிகள் (தமிழ், முஸ்லீம்) தெரிவுசெய்யப்படுவர்.

புதிய அரசமைப்புச் சட்டம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை உடனடியாகப் பெற்றாலும்கூட நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் பதவிக் காலம் 2005ஆம் ஆண்டுவரையே நீடிக்கும். தற்போதைய ஜனாதிபதியே 2005ஆம் ஆண்டுவரை பிரதமராகவும் இருப்பார்.

நாடாளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரம் 2005ஆம் ஆண்டில் வழங்கப்படும்வரை புதிய அரசமைப்புச் சட்டத்தின் அங்கீகாரத்துடன் இரு பிரதி ஜனாதிபதிகள் நியமிக்கப்படுவர்.

இவர்களில் ஒருவர் தமிழ்ச் சமூகத்தையும், மற்றவர் முஸ்லீம் சமூகத்தையும் சேர்ந்தவர்களாக இருப்பர்.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் 2005 இல் முடிவடைந்த பின்னரே ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு நாடாளுமன்றம் பூரண அதிகாரத்துடன் செயற்படும். (ஐ-3)

### சம்பளக் கொடுப்பனவு

தென்மராட்சி,ஜூலை14

கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் மேமாதத்தில் வழங்கப்படவேண்டிய அங்கத்தவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை வடமராட்சி கொத்தணி அலுவலகத்தில் வைத்து தற்போது வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### மன்னார் ஆயர் வன்னிக்கு

வவுனியா,ஜூலை14

மன்னார் ஆயர் அதிவணஇராயப்பு யோசவ் ஆன்மீக விஜயம் ஒன்றை மேற்கொண்டு இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ளார்.

மடுத் தேவாலயத்துக்கு நேற்றுமுன்தினம் சென்றடைந்த ஆயர் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள மக்களைச் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அங்குள்ள மக்கள் படும் இன்னல்கள் குறித்தும் அவர் கேட்டறிவார். (ஐ-3)

### சாகித்திய விழா போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை14

வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவையின் இரண்டாயிரமாம் ஆண்டு சாகித்திய விழா போட்டிகள் நாளை சனிக்கிழமை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவையினால் நடத்தப்படும். இப்போட்டியில் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளும், திறந்த போட்டிகளும் இடம்பெறும். (ஐ-15)

# மீற்றர் பதிவு இன்றி இயங்கும் எரிபொருள் நிலையங்கள்

யாழ்.மாவட்டத்தில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கும் சாதனங்கள் மீற்றர் பதிவுகள் இல்லாமல் இயங்குவது நிறுவைகள், அளவைகள் சேவைகள் திணைக்களத்தினால கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபரின் உத்தரவின் பேரில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மேற்படி திணைக்கள அதிகாரிகளினால் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இப்பரிசோதனையின்போதே மீற்றர் பதிவுகள் இல்லாமல் இயங்கும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மீற்றர் பதிவு இன்றி இயங்கும் எரிபொருள் நிலையங்கள் உடனடியாக சீர் செய்யப்பட வேண்டும் எனவும் அவ்வாறு செய்யாதுவிடில் அந்த நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட வேண்டும் என்றும் யாழ். அரச அதிபர் பணித்துள்ளார். (ஐ-5)

# கத்தோலிக்க ஆசிரியர் விவரம் சேகரிப்பு

நாட்டில் பணிபுரியும் தமிழ் கத்தோலிக்க ஆசிரியர்களின் விவரங்களை தேசிய கல்வி ஆணைக்குழுவும் கல்வித் திணைக்களமும் கோரியுள்ளன.

இந்த விவரங்களை வழங்க வசதியாக சகல கத்தோலிக்க ஆசிரியர்களையும் தபால் மூலம் பதிவு செய்யுமபடி யாழ். மறைக் கல்வி நிலைய இயக்குநர் அருட்திரு. நேசராசா அடிகள் கேட்டுள்ளார்.

இந்த ஆசிரியர்களில் ஐந்நூறு பேருக்கு அதிபர்களுக்கான பயிற்சியும் வழங்கப்படவிருக்கின்றன.

நாற்பது வயதுக்குட்பட்ட பட்டம்பெற்ற, பட்டப்பின் டிப்ளோமா பெற்ற, ஆங்கில அறிவுடையவர்கள் இந்தப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

ஏற்கனவே தற்காலிக அதிபர்களாக உரிய தரம் இன்றிப் பணியாற்றுபவர்களும் இந்தப் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இதற்கான பதிவுகளை 'இயக்குநர், மனிதமுன்னேற்ற நடு நிலையம், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்' என்ற முகவரியில் மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)


## வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்

சாவகச்சேரி ராஜன் ஆபரணமாளிகை நெல்லியடி பிரதானவீதி லவ்லி றேக்கோடிங் பார் அண்மையில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்க்கு அறியத் தருகின்றோம்.

*பிரதான வீதி,*
*நெல்லியடி.*

(76460)

உரிமையாளர்,
சபா.நடராசா.

சாவகச்சேரி நேசம் அழகு நகை, நுணாவில் வரதன் நகைத் தொழிற்சாலை ஆகிய இரண்டும் இணைந்து தற்போது பிரதானவீதி, சங்கானையில் இயங்குகின்றன என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*இரா. ஜெயபாலன்*
*து. வரதன்*

பிரதான வீதி,
சங்கானை.

(76452)

## ஆண்டு மிலேனியத்தில் அகவை ஒன்று



இராஜேந்திரன், சுபாசினி தம்பதிகளின் செல்வப்புதல்வி

## ஹம்சிகா

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (14-07-2000) வெள்ளிக்கிழமை மானிப்பாய் வீதி, மருதனார்மடத்திலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். ஹம்சிகாவை அவரது அன்பின் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, சித்தி, அம்மப்பா, அம்மம்மா, ஆசை மாமா, ஹொலண்டிலுள்ள துர்க்கா, அத்தான், சஜீப். பிரான்சிலுள்ள பெரியமாமா, சின்னமாமா, அத்தை, அத்தான் சுஜீபன், பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் உடுவில் மீனாட்சி அம்மன் துணைகொண்டு பல்லாண்டு காலம் இன்பமுடன் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
சண்முகநாதன்
(அம்மப்பா)

*மானிப்பாய் வீதி,*
*மருதனார் மடம்.*

(C/12195)

# மானிப்பாய் இந்து சம்பவம்; அதிபர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கடந்த சில தினங்களுக்குமுன் தாக்குதலுக்கு உள்ளான சம்பவத்தை வடமாகாண அதிபர்கள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யுத்தச் சூழ்நிலைகளுக்குள் பொதுமக்கள் படும் அகதி வாழ்க்கை, அவலங்கள், அவஸ்தைகளுக்கு இடையிலும் எமது இனத்தின் பாரம்பரியச் சொத்தாக மிளிரும் கல்விப் பாரம்பரியத்தை அழியவிடாது காத்துவரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு அடாவடித்தனத்தையும் எமது கல்விச் சமூகமும் அதனை நேசிக்கும் எம்மின மக்களும் பொறுத்துக்கொண்டிருக்கப்போவதில்லை.

இந்த வகையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற சம்பவத்தை எமது சங்கம் கண்டிப்பதுடன் இதற்கு ஏற்ற நடவடிக்கைகள் உரிய காலத்தில், உரிய அதிகாரிகளால் எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்கிறது.

கடந்த இரண்டு மாதங்களாக மக்களின் இடம்பெயர்வு வருகையால் பாடசாலைகள் பாதிக்கப்பட்ட விடயம் சம்பந்தமாகவும் அதற்கான மாற்று ஏற்பாட்டு ஆலோசனைகள் அதிபர்களாலும் கல்வித்துறை அதிகாரிகளாலும் உரிய மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களின் பாராமுகமான செயற்பாட்டின் விளைவாகவே இது ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சியிலும் யாழ். நகரப் பகுதிகளிலும் மக்கள் ஏதிலிகளாகவும் தமது உறவுகளை இழந்தும் பிரிந்தும் உடல் உளப் பாதிப்புக்களுடனும் இடம்பெயர்ந்து வந்து பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்த போதுமனிதாபிமானம் அற்று செயற்பட்ட பல சம்பவங்கள் மனச்சாட்சிக்கு சவால் விடுவதாக இருந்ததனைப் பலரும் அறிவர்.

இந்நிலையிலும் இவ்வாறு துன்பமுறும் இதே மக்களது பிள்ளைகளும் அதிபர்களும் ஆசிரியர்களும் இடம்பெயர்ந்தவர்களுடன் இணைந்து தமது கல்விக் கடமைகளைத் தொடரவும் அவர்களுக்கு உதவியும் ஒத்தாசையும் புரிந்து அர்ப்பணிப்புத் தன்மையுடன் கரம் கோர்த்து கடமை புரிவதற்கு மாறாக மேற்படி சம்பவம் நடைபெற்றமை துரதிர்ஷ்ட வசமானதே.

யுத்தம் தொடங்கி இது வரை காலமும் மிகச் சோதனை மிகுந்த காலத்திலும் கூட கல்விக்கு சகல தரப்பினராலும் அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தினை நாம் எவரும் கொச்சைப் படுத்திவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் — என்று அதில் உள்ளது.

(ஐ-7)

## சகல கட்சித் தலைவர்களையும் ஜனாதிபதி சந்தித்துப் பேசுவார்

கொழும்பு, ஜூலை 14
சகல அரசியற் கட்சித் தலைவர்களையும் ஜனாதிபதி இன்னும் சில தினங்களில் சந்திக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்புத் திட்டம் தொடர்பாக அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே எட்டப்பட்ட உடன்பாடு குறித்து அரசியற் கட்சிகளின் அபிப்பிராயங்களைக் கேட்டறியவே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்ததாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது

இதேவேளை —

புதிய அரசமைப்பு ஆவணங்களைச் சகல கட்சிகளுக்கும் அனுப்பிவைக்க ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-க)

### மட்டக்களப்பு, அம்பாறை

## பட்டதாரிகள் பிரச்சினைக்கு இன்னும் 6 மாதங்களில் தீர்வு

மட்டக்களப்பு, ஜூலை 14
மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை ஆறு மாதங்களுக்குள் தீர்த்து வைக்கப்படும் என வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா உறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஆளுநரை கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து பட்டதாரிகள் நியமனம் குறித்து பேச்சுக்களை நடத்தியபோதே அவர் இந்த உறுதி மொழியை அளித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வேலை வழங்கவேண்டும் என்றுகோரி மட்டக்களப்பு காந்தி சிலை அருகே உண்ணாவிரதம் மேற்கொண்டதும் —

ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டிருந்ததும் —

தெரிந்தவையே.

(ஐ-க)

## உள்ளூராட்சிசபைகளில் சீர்திருத்தங்கள் வரும்

### ஆராய விசேட குழு நியமிப்பு

கொழும்பு, ஜூலை 14
உள்ளூராட்சிச் சபைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஆலோசனைகளை சமர்ப்பிக்க அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு அடுத்த வாரம் கூடி. ஆராய்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

அந்த ஆலோசனைகளின் அடிப்படையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

(ஐ-க-3)

## தனியார்துறை ஊழியருக்குப் புதிய ஓய்வூதியத் திட்டம்

### அடுத்த ஆண்டு அமுலுக்கு

கொழும்பு, ஜூலை 14
அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தனியார்துறை ஊழியர்களுக்கென ஓய்வூதியத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கத் தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஊழியர் சேமலாபநிதியில் இருந்து 2.5 சதவீதத்தை ஒதுக்கித் தனியான நிதியம் ஒன்றை அமைப்பதன் மூலம் இந்த ஓய்வூதியத் திட்டம் அமுல்படுத்தப்படவிருக்கின்றது.

ஊழியர்களின் சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் பெற்ற சம்பளத்தின் 3.5 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான தொகையை ஓய்வூதியமாக வழங்கக்கூடிய வகையில் இத்திட்டம் அமையும்.

(ஐ-க)

## ஓய்வூதியர் சங்கம் அங்குரார்ப்பணம்

வலி.கிழக்கு, ஜூலை 14
அரசாங்க சேவை ஓய்வு பெற்றோரின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் கீழ் அரச ஓய்வூதியரின் சங்கத்தை ஸ்தாபிப்பதற்கான முதலாவது கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய்க் கிறிஸ்தவக்கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த சகல ஓய்வூதியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

(ஐ-180)

★ ★ ★

வலி.கிழக்கு, ஜூலை 14
ஓய்வு பெற்றோரின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 5 (4) ஆம் பிரிவின் கீழ் அரசாங்க ஓய்வு பெற்றோரின் சங்கத்தை ஸ்தாபிப்பதற்கான முதலாவது கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் கே. சேதீஸ்வரன் தலைமையில் இடம் பெறும்.

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சகல ஓய்வூதியர்களையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(ஐ-180)

### அச்செழுப் பகுதியில் இருந்து

## 565 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன

வலி. கிழக்கு ஜூலை 14
அச்செழு கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து 565 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

அச்செழுவில் இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் வசித்த குடும்பங்களே இடம்பெயர்ந்து சங்கானை, சண்டிலிப்பாய், உரும்பிராய், ஊரெழு போன்ற பகுதிகளில் தங்கியுள்ளன.

இப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மரக்கறி வகைகள், வாழைகள் போன்ற பயிர் வகைகளைக் கைவிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

## ஓகஸ்ட் 16 ஆம் திகதிக்கு முன் நாடாளுமன்றம் கலைப்பு?

கொழும்பு ஜூலை 14
நாடாளுமன்றத்தைக்கலைப்பதற்கான அறிவிப்பு அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் எந்த நேரத்திலும் ஜனாதிபதியால் வெளியிடப்படலாம் என்று அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி அரச சார்புப்பத்திரிகை ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது

நாடாளுமன்றத்தின் ஆயுள் காலம் அடுத்தமாதம் 24 ஆம் திகதி முடிவடைகின்றது.

இந்தத் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் —

இந்த அரசமைப்பு விதிகளின் கீழ் நாடாளுமன்றத்தை அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் எந்த நேரத்திலும் கலைக்கும் அறிவிப்பு வெளியிடப்படலாம் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியில் இருந்து பதினான்கு தினங்களுக்குப் பின்னர் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 21 ஆவது நாள் நண்பகல் 12 மணி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அதேசமயம் —

பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும் தேர்தலை எந்தவேளையிலும் நடத்தக் கூடியதான சகல ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் பூர்த்தி செய்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்ததஸநாயக்க தெரிவித்துள்ளார்

(ஐ-க)

## வினாத்தாள்கள் யாழ். வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 14
திறந்த பல்கலைக்கழக கல்வியின் பட்டப் பின் படிப்பு கற்கை நெறிக்கான பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

கொழும்பு சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இந்த வினாத்தாள்களை எடுத்து வந்துள்ளார்.

(ஐ-3)

### சாவகச்சேரியில் இயங்கிய

## காசநோயாளர் பிரிவு கோப்பாய்க்கு மாற்றம்

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இயங்கிவந்த காசநோய்ச் சிகிச்சைப் பிரிவை கோப்பாய் ஆஸ்பத்திரியில் இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். சுகாதார சேவைப் பணிப்பாளர் மேற்கொண்டு வருகின்றார் —

சாவகச்சேரியில் இயங்கிய இந்தப் பிரிவு நோயாளர்கள் இடம்பெயர்வு காரணமாக அங்கிருந்து இடமாற்றப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கென தனியான பிரிவு தேவைப்படுவதனால் உடனடியாகக்கோப்பாய் ஆஸ்பத்திரியில் இதனை இயங்க வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் —

இன்னும் ஒருவார காலத்தில் இப் பிரிவு இங்கு இயங்கும் என்றும் —

சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-180)

### சுகாதாரம் பேணுவது பற்றி

## நலன்புரி நிலையங்களில் தொண்டர்களுக்குப் பயிற்சி

வலி. கிழக்கு, ஜூலை 14
இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ளோரின் சுகாதார நிலையினை மேம்படுத்த சுகாதாரத் தொண்டர்களைப்பயிற்றுவிக்கும் முகமாக நலன்புரி நிலையங்களில் உள்ளதொண்டர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

நலன்புரி நிலையங்களில் சுகாதாரம் பேணும் விடயம் சம்பந்தமாக மக்களுக்கு விளக்கும் பொருட்டு தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி எஸ். இந்திரராசா தலைமையில் இடம்பெற்றுவரும் இப்பயிற்சி நெறியில் 30 சுகாதாரத் தொண்டர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

(ஐ-180)

## அநாதரவாகக் கிடந்த சைக்கிள்

பருத்தித்துறை, ஜூலை 14
நெல்லியடிப் பகுதியில் சைக்கிள் ஒன்று அநாதரவாக இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சைக்கிளை உரியவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டி நெல்லியடி வணிகர் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-118)

# பின்தங்கிய பிரதேச ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் கிடைக்கும்

## விரைவில் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு

கொழும்பு, ஜூலை 14

பின்தங்கிய பகுதிகளில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான யோசனைகள் விரைவில் பத்திரான அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் தெரிவித்துள்ளார்.

வீரகெட்டியவில் ஆசிரியர் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின்படி மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவாக ஆயிரத்து 500 ரூபா வீதமும், பின்தங்கிய பகுதிகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-க)

## மருதனார்மடம் சந்தையில் புதிதாக கொட்டகை அமைப்பு

வலிகாமம் தெற்கு, ஜூலை 14

மருதனார்மடம், சந்தையில் இடநெருக்கடியைக் குறைக்கும் விதத்தில் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சந்தையின் தெற்குப் புறமாக புதிதாக ஒரு கொட்டகை அமைக்கப்பட்டு விவசாயிகள் கொண்டுவரும் விளைபொருள்கள் அப்பகுதியில் வைத்து விலை கூறப்பட்டு வழங்கப்படுவதால், சந்தையில் கொள்வனவு செய்ய வருபவர்களின் நெருக்கம் குறைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக மேற்படிசந்தையில் கொள்வனவு—விற்பனவு செய்ய முடியாத அளவுக்கு இடநெருக்கடி காணப்பட்டது.

கொள்வனவாளர்கள் சென்று பொருள்கள் வாங்கும் வழிகளிலேயே வியாபாரிகள் பொருள்களை வைத்து விற்கவேண்டி இருந்தது.

மக்கள்இடம் பெயர்வைத் தொடர்ந்து மேற்படி சந்தைக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகை மூலம் இடநெருக்கடி குறைந்துள்ளது. (இ-152)

## நியமனம்

பருத்தித்துறை, ஜூலை 14

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு தலைமை பொதுச் சுகாதாரப் பரிசோதகராக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பணியாற்றிய செல்வி எஸ். பாலாம்பிகை நியமிக்கப்பட்டுள்ளார். (இ-118)


அச்சுவேலி

மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம்

# பொதுக் கூட்டம்

இடம்: மகாவித்தியாலய மண்டபம்

காலம்: 16-07-2000 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 10.00 மணி

இப்பொதுக் கூட்டத்திற்கு சகல பழைய மாணவர்களையும் பங்குபற்றும்படி கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்

பழைய மாணவர் சங்கம்.

(76458)


## தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்துக்கென அமைக்கப்பட்ட புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

திருநெல்வேலி விநாயகர் சிற்பாலயக் கலைஞர் 'சிற்ப ஜோதி'கலாபூஷணம் சு.இராசரத்தினம் இத்தேரை வடிவமைத்துள்ளார். (க-15)

## மரத்தால் வீழ்ந்து மரணம்

மரத்தில்ஏறிய சீவல்தொழிலாளி ஒருவர் தவறி வீழ்ந்து மரணமானார்.

இச் சம்பவம் அண்மையில் கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தனபாலன் (வயது 36) என்பவரே மரணமானவராவார். (ஐ-17)

# குறுகியகால விவசாய பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு

வலிகாமம் தெற்கு, ஜூலை 14

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் குறுங்கியகால விவசாய இலவசப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நான்கு மாதங்களுக்கு மட்டும் நடைபெறும் இந்த இலவச விவசாயப் பயிற்சிநெறிகளில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பயிற்சி நெறிக்காலத்தில் உதவித்தொகைகள் வழங்கப்படஉள்ளன.

பயிற்சிக்கால முடிவில் பயிற்சி நெறிகளில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

16 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட ஜி. சி. ஈ சாதாரண தரத்தில் கல்வி கற்ற ஆண்கள், பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல் மிருக பரிபாலனம் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்போர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளர் நற்சான்றிதழ் மற்றும் இருவருடைய நற்சான்றிதழ்களுடன் இம்மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெற உள்ள நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு விவசாய நிறுவனத்தின் அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-152)

## நல்லிணக்கசபை

நெடுந்தீவு, ஜூலை 14

நெடுந்தீவில் உள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளுக்குமாக மூன்று நல்லிணக்கசபைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

சபைகளின் பொறுப்பாளர்களாக கிராம அலுவலர்கள் இருப்பார்கள். (க-111)


# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

லைற் எஞ்சின் (பெற்றர்) 5 கோஸ்பவர் இங்கிலன்ட் டைனமோ 3 கிலோ (இங்கிலன்ட்) றேடியேற்றர் கூலர் (இழுவை வண்டியுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.கந்தசாமி, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (76393)

ஊறுகாய்ச் சாடிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: கா. பஞ்சாட்சரம், சிவன் கோயிலடி, ஆவரங்கால். (76396)

எம்மிடம் பாவனையிலுள்ள மோட்டார் சைக்கிள் (Kawasaki- GTO-110),T v (Sony - 2060) டெக் (LG-புதியது), Amplivier (TOA-50 w) Box என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 32, கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. (76461)

### சனீஸ்வர மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றன.சனீஸ்வர, வியாழ, ராகு கேது மாற்றமடையும் பலாபலன்கள். வேலணை சோதிடர் திரு. V. A. சிவராசா வெளியீடு என்று கேட்டு வாங்குங்கள். சோதிடம் சம்பந்தமான தொடர்புகளுக்கு: 152B, அரசடிறோட, கந்தர்மடம் என்று தேடி வாருங்கள். (76398)

### பொய்யாமொழி ஜோதிடம்

கல்வித்தடை, விவாகத் தடை, தொழில் தடை தீர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சனி, செவ்வாயில் ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும், ஞாயிறு மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (76451)

### வீடு தேவை

நல்லூர்ப் பகுதி அல்லது யாழ். நகர் வடமேற்குப் பகுதியில் அமையப் பெற்ற நல்ல நிலையிலுள்ள சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்குத் தேவை. நியாயமான வாடகை, விற்பனை குறித்த விவரங்களுடன் தொடர்புகளுக்கு: வீஎ. இல. 1058, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (சி/12203)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

## கலைப்பீடம்

கலைப்பீட மாணவர்களுக்கு 05.07.2000திகதியிடப்பட்ட உதயன் விளம்பரத்தின்படி 17.07.2000 அன்று நடைபெறவிருந்த ஆங்கிலம் (இரண்டாம் மொழி) மீள் பரீட்சை 24.07.2000 திகதியிலிருந்து நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இப் பரீட்சை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்திலும் நடைபெறும்.

பதிவாளர்

13.07.2000

(சி/12208)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1948 | | 2000 |
| — | | — |
| 04 | | 06 |
| — | | — |
| 21 | | 14 |



## திருமதி சுப்பிரமணியம் மனோன்மணி

எங்கள் குடும்ப விளக்கே!
மட்டுவிலில் காயமடைந்து
அநுராதபுரத்தில் அமரரானாயே!
தங்கள் உடலைக் கூடக் கண்ணால்
காணமுடியாத பாவிகளாகி விட்டோமே!

இன்று (14 07—2000) வெள்ளிக்கிழமை அமரரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை.

சந்திரபுரம், மட்டுவில்.

தற்காலிக முகவரி: க. குமாரவேலு, வைரவர் கோயிலடி, சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.

(76376)



# பிரிவுபசாரவிழா

இறுதிவருட இந்துநாகரிகத்துறை ( A, B பிரிவு ) ( சிறப்புக்கலை, பொதுக்கலை ) மாணவர்களுக்கான பிரிவுபசார விழா இன்று (14 - 07 - 2000) பி. ப. ஒரு மணிக்கு இடம்பெறும். அனைவரும் சமுகம் அளிக்கவும்.

நன்றி.

2 ஆம், 3 ஆம் வருட இந்து நாகரிகத்துறை மாணவர்கள்

(76465)



## இணுவில் லயன்ஸ்கழகத்தின்

ஒகஸ்ட் 2000 க. பொ. த (உயர்தர) மாணவர்களுக்கான

# இலவசக் கருத்தரங்கு

(பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் நடத்தப்படுகிறது.

இடம்: இணுவில் மத்திய கல்லூரி.

காலம்: 16—07—2000 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி ( S. L. .T )

| 16—07—2000 | வர்த்தகம் | கலை |
|---|---|---|
| 9.00—10.30 | வணிகக்கல்வி | இந்துநாகரிகம் |
| 10 30—12.00 | கணக்கீடு | தமிழ் |
| 12.00—2.00 | பொருளியல் | பொருளியல் |

அனைத்து மாணவர்களையும் பங்குகொண்டு பயன்பெற வேண்டுகின்றோம்.

விளம்பர உதவி:

எவரெஸ்ற் கல்வி நிலையம், இணுவில்.

(76472)

## அதிரடி அரங்கு

வலிகாமம் பகுதியில் படையினரின் நடவடிக்கைகளால் தலைப்பட்ட மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து முறையிடப்பட்டால் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை அண்மைக்காலத்தில் அவதானிக்க முடிகின்றது.

இப்பிரதேசத்தில் மக்கள் தமது பிரச்சினைகள், பாதிப்புக்கள் தொடர்பாக 2269 அல்லது 3041 இலக்கத் தொலைபேசி மூலம் வலிகாமம் பகுதிக்குப் பொறுப்பான 51ஆவது படையணிக் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் டபிள்யூ. காமினி ஐயசுந்தரவுடன் தொடர்புகொண்டு முறைப்பாடு செய்யலாம் என்று கடந்த வாரம் பலாலி இராணுவத் தலைமையகம் பத்திரிகை மூலம் அறிவித்திருந்தது. அவ்வாறு செய்யப்படும் முறைப்பாடுகள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை யாழ். பல்கலைக்கழகச் சந்தியில் இளைஞர் ஒருவர் சீருடையினரால் தாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது. அன்று மாலைக்குள்ளேயே உரிய விசாரணை நடத்தப்பட்டது; நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோல -

கடந்த திங்களன்று அரியாலைப்பகுதியை நோக்கி படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை குறித்து உதயனில் வெளியான முதலாம் பக்கச் செய்தியின் இறுதியில் "காலை வேளையில் பலாலி வீதியில் ஆங்காங்கே வேகமான வீதிப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நடந்துகொண்டதாகக் கூறப்படும் பொதுமக்கள் சிறுசிறு தாக்குதல்களுக்கு இலக்காகினர்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது குறித்து படைத்தரப்பில் உடனடியாக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. அடுத்த நாளே பலாலித் தலைமையகத்தின் கட்டளையின் பேரில் இராணுவப் பொலீஸாரின் அணி ஒன்றே களத்தில் குதித்து விசாரணை நடத்தியதாகத் தெரிகின்றது. அந்த அணி மேற்படி செய்தி குறித்து ஆதாரங்கள் மற்றும் தகவல்களைப் பெறுவதற்காக உதயன் ஆசியர் பீடத்துக்கும் வருவதற்குத் தவறவில்லை.

எது, எப்படியோ உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் நிலைமை தோன்றியிருப்பது வரவேற்புக்குரியது.

மக்களும் பயப்படாமல் தமது பாதிப்புக்கள் குறித்து சம்பந்தப்பட்டோருக்கு முறைப்பாடு செய்யமுன்வந்ததால்தான் இந்தப் போக்கின் யதார்த்த நிலை தெளிவாகும்.

இன்னொரு விடயம் . இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் நாள்களில் இராணுவத்தினர் ஓடித்திரியும் பலாலி வீதி போன்ற வீதிகளைத் தவிர்ப்பது - அல்லது அவற்றில் பயணம் செய்யும் போது ஒழுங்குடனும் , அவதானத்துடனும் நடந்து கொள்வது - தேவையற்ற சிக்கல்களை தள்ளிவைக்கும் அல்லவா?

* * *

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் சுட்டிக்காட்டிய விவகாரம் இது:-

யாழ். மருத்துவ பீடத்துக்குப் பின்னால் உள்ள யாழ். பல்கலைக்கழக மைதானத்தின் வடக்கு முனையில் இருந்து தெற்கு முனைவரை நிலத்தில் சுமார் இரண்டு முதல் மூன்று அங்குல அகலத்தில் பாரிய வெடிப்பு உருவாகியுள்ளது. மூன்று கிழமைக்கு முன்னர் தோன்றிய இந்த வெடிப்பின் அடையாளங்கள் இன்னும் தெளிவாகத் தெரிகின்றன.

இந்தத் தொடர் வெடிப்பு எப்படி உருவானது? அதற்குக் காரணம் என்ன? உலகின் பல பகுதிகளிலும் அடிக்கடி பேசப்படும் பூமி அதிர்வின் பலாபலனின் இதுவும் ஒன்றா? - இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் அந்த மாணவர்.

வெடிப்புத் தெரிவது உண்மைதான்.

அந்த மைதானம் குப்பை மற்றும் மண் கொட்டப்பட்டு மேடாக்கப்பட்டது என்றும், அவை உக்கிப் புதையுண்டு போனதால் மேற்பரப்பில் வெடிப்பு வந்திருக்கக்கூடும் என்றும் அப்பகுதிவாசி ஒருவர் கருத்துக் கூறுகின்றார்.

எது,எப்படி என்றாலும் புவியியல் துறையில் புலமையுள்ள துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை போன்றோர் கவனம் எடுக்கவேண்டிய விடயம் இது. அருகிலுள்ள மருத்துவபீடக் கட்டடங்களையும் இந்த வெடிப்பு பாதிக்குமா என்பதைச் சோதித்துக் கொள்வதும் நல்லது.

* * *

செம்மணிப் புதைகுழி பரபரப்பு இன்னும் அடங்கவில்லை. மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மீது வெளிநாட்டில் மரபணு பரிசோதனை செய்வது வரை பல்வேறு விவரங்கள், தகவல்கள் தொடர்ந்து செய்திகளாக வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் அதே காலத்தில் தோண்டப்பட்ட மற்றொரு பெரிய மனிதப்புதைகுழி விவகாரம் ஏன் புதைக்கப்பட்டுவிட்டது என்பதுதான் புரியவில்லை. துரையப்பா விளையாட்டரங்கு புதைகுழி பற்றித்தான் குறிப்பிடுகின்றோம்.

ஒரு சிறிய இடத்தில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக - சிறுவர், குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என்று பலதரத்தைச் சேர்ந்த பொதுமக்களின் உடையவை என்று கருதப்படும் - இருபத்தியைந்துக்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் அங்கு மீட்கப்பட்டன. அங்கு மேலும் எலும்புக்கூடுகள் இருக்கலாம் என்ற நிலையில் தோண்டும் பணி இடைநிறுத்தப்பட்டது; மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் பொதிசெய்யப்பட்டு பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

ஆனால் அத்தோடு விவகாரம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. ஒன்றரை வருடங்களாக இது விடயத்தில் எந்த நகர்வும் இல்லை.

நீதிமன்றம் என்ன செய்கிறது? தோண்டும் பணியைத் தொடர்வதற்கு ஏதேனும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட எலும்புகள், எச்சங்களின் கதி என்ன? பகுப்பாய்வு செய்தார்களா? நீதிமன்றத்துக்கு ஏதேனும் அறிக்கை சமர்ப்பித்தார்களா? இல்லையேல் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள், எச்சங்கள் மீண்டும் புதைக்கப்பட்டு விட்டனவா?

செம்மணி குறித்து ஆரவாரம் செய்த பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் எல்லாம் இது விடயத்தில் மௌனம் சாதிப்பது ஏன்?

புரிந்துகொள்ள முடியாத வினாக்கள் இவை.

இந்திய அமைதிப்படை யாழ். குடாநாட்டில் நிலைகொண்டிருந்த காலத்தில் புதைக்கப்பட்டவர்களின் மனித எலும்புக்கூடுகளே அவை என்ற அபிப்பிராயம் ஆரம்பத்தில் இருந்தே இங்கு நிலவிவருகிறது.

இந்த விடயத்தை பரபரப்பாக்கி அயல் வீட்டுக்காரரின் எதிர்ப்பை, அதிருப்தியை ஏன் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்ற காரணத்தினால்தான் பல தரப்புகளும் இந்த விவகாரத்தில் தெரிந்தும் தெரியாதது போல் - அமுக்கி - வாசிப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

துரையப்பா விளையாட்டரங்கில் புதைக்கப்பட்ட உண்மைகள் வெளிவருவதற்கு உரிய மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

– மின்னல்


**செல்வா நகைமாடம், சாவகச்சேரி**

தற்போது K.K.S.வீதி, கஜேந்திரன் ஸ்ரோரில் முன்பாக இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*K.K.S வீதி,*
*யாழ்ப்பாணம்.* (76453)

*த. தனேசன்.*


## புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

நேற்றைய 'உதயன்' பத்திரிகையில் வெளியான 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் இல.3 இன் விடைகள் வருமாறு:-

### பகுதி - I

(1) 8 (2) 4 (3) 1
(4) பாடசாலை (5) பண்புடன்
(6) சிறுவர்கள் (7) வெறுப்பு
(8) படித்தான் (9) நீங்கள்
(10) லண்டன்
(11) கண்டி - மத்தியமாகாணம்
(12) காலி - தென்மாகாணம்
(13) கொழும்பு - மேல்மாகாணம்
(14) திருகோணமலை - கிழக்குமாகாணம்
(15) யாழ்ப்பாணம் - வடமாகாணம்
(16) சரி (17) பிழை (18) பிழை
(19) சரி (20) சரி
(21-29)
இடமிருந்துவலம்:-1.பல்கலைக்கழகம், 2.படம், 3.புத்தகம், 4.கரடி.
மேலிருந்துகீழ்:-4.கடலை, 5.கண்டம், 6.மகள் (இலக்கம் 6 வினாத்தாளில் தவறுதலாக விடப்பட்டுவிட்டது), 7.கடிகாரம், 8.பல்.
(30) Market (31) School
(32) Road (33) Temple
(34) V (35)I (36)IV (37)III
(38) V (39)IV (40)I (41)I
(42) III (43)II (44) பரி
(45) (2,5,4,1,3) (46) (3,2,1,4)
(47) (2,4,1,3,5) (48) (2,3,1,4,5)
(49) (1,4,3,5,2) (50) (1,5,4,3,2)

### பகுதி - II

(1) வீதி ஒழுங்கு தெரியாதவள்
(2) இருவர் (3) விதவை
(4) தொண்டர் நிறுவனம்
(5) விரைந்து செல்லுதல்
(6) மயங்கிக் கிடத்தல்
(7) வாயில்வந்தபடி பேசுதல்
(8) சோகம் (9) உதவிசெய்தல்
(10) மான்போல்
(11) இரத்தம் - குருதி
பாதசாரி - நடந்துசெல்வோர்
மூர்ச்சை - மூச்சு
சாரதி - ஓட்டுநர்
(12) செஞ்சிலுவைச் சங்க வாகனம், கைகொடுத்தது.
(13 செஞ்சிலுவைச்சங்க, ஓடிவந்தாள்.
(14) பத்து + இரண்டு
மூச்சு + பேச்சு
(15) ✚ (16)II (17)I (18)III
(19)

இலக்கம் 17,
கண்டிவீதி,
வவுனியா.

அன்புள்ள சிவா,

உமக்குத் தேவையான பயிற்சிப்புத்தகங்கள் யாவும் என்னிடம் உள்ளன. அப்புத்தகங்களைக் கொண்டு செல்வதற்கு எப்போது வருவீர்? வரும்போது எனக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய புத்தகங்களை கமலிடம் வாங்கிவரவும்.

இங்ஙனம்,
அன்புள்ள,
சுமன்.

(20) சுமன், சிவாவுக்கு
(21) திகதி இடப்படவில்லை
(22) ரூ. 13.50 (23) ரூ.3.50
(24) ரூ.28.1 (25) Post Office
(26) Stamp (27)Letter (28)Address
(29) 200 (30) 25
(31) மாபருப்பு அல்லது சீனி,பருப்பு
(32) மா, சீனி (33) 1/2 பங்கு
(34) ரூ.30 (35) ரூ.83.25
(36) ரூ.14 (37) ரூ.5.10
(38) ரூ.77.25 (39) A,B
(40) B,D (41) B,A ஊடாக
(42) அ, உ ஆ அல்லது ஈ, இ
(43) A- வெற்றுப் பேனாக்குழாய்
B- நிறமூட்டப்பட்ட நீர் மட்டம்
C- குப்பி
D- நிறமூட்டிய நீர்
E- முகவை/பாத்திரம்
F- சுடுநீர்
(44) திரவ விரிவை எளிதில் அவதானிக்க
(45) நிறமூட்டிய நீரின்மட்டம் குழாய் வழியாக மேலே உயர்வதை
(46) வெப்பம் காரணமாகத் திரவம் விரிவடைகிறது
(47) தண்டிச்சில்லுக்கு வளையம் பொருத்துதல், தண்டவாளங்களுக்கு இடையில் இடைவெளி விட்டுப் பொருத்துதல்.
(48) 4 (49) 1 (50) 3 (51) 2
(52) M (53)L (54)L (55)S (56)D

(57)

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

(58)

| | | |
|---|---|---|
| 5 | 10 | 3 |
| 4 | 6 | 8 |
| 9 | 2 | 7 |

(59)

| | | |
|---|---|---|
| 7 | 12 | 5 |
| 6 | 8 | 10 |
| 11 | 4 | 9 |

(60)

| | | |
|---|---|---|
| 6 | 11 | 4 |
| 5 | 7 | 9 |
| 10 | 3 | 8 |

# 2ஆயிரம் குடும்பங்களுக்கு சூரிய சக்தி மின்சாரம்!

வலி.வடக்கு,ஜூலை14

யாழ்.மாவட்டத்தில் மின்னிணைப்பு வழங்கப்படாத பகுதிகளில் உள்ள 2ஆயிரம் குடும்பங்களுக்கு சூரியசக்தி மின்சாரம் (சோலர்பனல்) வழங்கப்படவுள்ளது.

"சூரியசக்தி மின்சாரம் பெறத் தகுதியான குடும்பங்களைச் சிபார்சு செய்யும்படி பிரதேச செயலாளர்களை அரச அதிபர் கேட்டுள்ளார்.

46 ஆயிரம் ரூபா செலவில் வழங்கப்படவுள்ள இந்த மின் விநியோகத்தைப் பெறுபவர்கள் 50 வீதமான பணத்தை மட்டும் (23 ஆயிரம் ரூபா) செலுத்தினால் போதுமானதாகும். மிகுதி 50 வீதம் மானியமாக வழங்கப்படவுள்ளது. மிகுதித் தொகையை 30 மாதங்களில் தவணை முறையில் செலுத்த முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இத் திட்டம் பூரண வெற்றியளிக்கும் சந்தர்ப்பத்தில் மேலும் விஸ்தரிக்கப்படலாம் எனவும் அறியப்படுகின்றது. (ஐ-86)

## பிரியாவிடை வைபவம்

யாழ்ப்பாணம்,ஜூலை14

ஆவரங்கால் நடராஜஇராமலிங்க வித்தியாலயத்தில் கடந்த 10 ஆண்டுகளாக அதிபராக கடமையாற்றி அதன் வளர்ச்சிக்காக உழைத்து அண்மையில் ஓய்வுபெற்றுச் சென்ற சு.முத்துகுமாரசாமியின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பிரியாவிடை வைபவம் ஒன்றைப் பழையமாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தவுள்ளன.

அன்றையதினம் விளையாட்டு மைதானமும் ஓய்வுபெற்ற அதிபரினால் பிற்பகல் 3 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சிக் கண்காட்சியும் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும். (ஐ-9)

## சமய நூல்கள் வெளியீட்டு விழா

வலிகாமம்தெற்கு,ஜூலை14

சர்வானந்த சமய பீடத்தின் ஆதரவில் ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) எழுதிய "மஹாகணபதி சகஸ்ரம்", "அக்னி கார்யம் - ஓர் அறிமுகம்", "யாகமண்டப பூஜை - ஓர் அறிமுகம்" ஆகிய நூல்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான மண்டபத்தில் வைத்து வெளியிடப்படும்.

முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விழாவில் நீர்வேலி சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள் நூல்களை வெளியிட்டு வைப்பார். கீரிமலை சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள், நயினை சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளும் இடம்பெறும்.

நூலின் முதற்பிரதியை நயினை சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள் பெற்றுக்கொள்வார்.

நூலாசிரியர் கோப்பாய் சிவம் பதிலுரை வழங்குவார். (ஐ-152)


# Computer Courses

**புதிய வகுப்புக்கள்**
**ஆரம்பம் 25-07-2000**

1. Diploma in Microsoft Office
   - MS Word 2000
   - MS Excel 2000
   - MS Access 2000
   - MS Power Point 2000
2. Special Course for School Students
   - Level I Rs.1000.00
   - Level II Rs.1000.00
3. Diploma in Computer Printers
   - Page Maker
   - Corel Draw
4. சுய தொழிலுக்கான அடிப்படைக் கணனிப் பயிற்சி
5. Certificate Courses
   - MS Word 2000
   - MS Excel 2000
   - MS Access 2000
   - MS Power Point 2000
   - Page Maker
   - Corel Draw
   - Pascal
   - dBase++
   - Visual Basic
   - Visual Fox Pro
   - Photo Draw

வசதிகள்
- மாதாந்தக் கட்டணம்
- வீடியோ படக்காட்சிகள் (MS Office)
- தமிழ் மூல விளக்க உரைகள்
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனத்துடனான Pentium III Multimedia கணனிகளினான செய்முறை வகுப்புக்கள்
- நூலக வசதி
- கையேடுகள்

**Computer Service**
- Laser Printing
- Stencil Cutting
- Offset Printing
- Maintaining Your PC

22/07/2000க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு,
Director,
T.R.R.O Computer Training Center,
Manipay Road,
Urumpirai.
(C/12210)

# இடம் மாற்றம் செய்யப்பட்ட யாழ். கைதிகள் மீண்டும் இங்கு

குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையை அடுத்து கடந்த மே மாத இறுதியில் யாழ்.சிறைச்சாலையில் இருந்து அனுராதபுரம் சிறைச்சாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்ட ஐம்பது கைதிகளும் விரைவில் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவர் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட இவர்கள் யாழ்.நீதிமன்றங்களின் உத்தரவின் பேரில் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கைதிகளில் ஏழு பேரை பிணையில் செல்ல அனுராதபுரம் நீதிமன்றம் அனுமதி அளித்திருப்பதாகவும் -

கைதிகள் ஐம்பது பேரும் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டதும் பிணையில் செல்ல அனுமதி அளிக்கப்பட்டவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்படுவர் எனவும் - ஏனையோர் தொடர்ந்தும் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பர் எனவும் - தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-7)

# செய்தித் தணிக்கை குறித்து தகுதிவாய்ந்த அதிகாரி விளக்கம்

கொழும்பு,ஜூலை14

யுத்தச் செய்திகளை வெளியிடும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை தகுதி வாய்ந்த அதிகாரி நேற்று அறிவித்தார்.

கடந்த கால, எதிர்கால இராணுவ நடவடிக்கைகள், தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்ட பாதுகாப்பு அதிகாரிகளின் உத்தியோகபூர்வ நடத்தைகள், இராணுவ ஆயுதங்கள் பற்றிய விற்பனைகள், துருப்புக்களை நிலைகொள்ளச் செய்தல் முதலானவற்றை விளக்கும் செய்திகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்புக்குப் பொறுப்பான உரிய ஸ்தாபனங்களால் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ அறிக்கைகளையும் செய்திகளையும் ஊடகத்துறையினர் தமது செய்திகளில் கையாள முடியும் என்றும் தகுதி வாய்ந்த அதிகாரி ஆரியரூபசிங்க தெரிவித்தார்.

ஆனால் இராணுவத்தினரின் மனோதிடத்தைப் பாதிக்கும் எந்தவொரு விடயத்தையும் வெளியிட வேண்டாம் என அவர் ஊடகத்துறையினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வழிமுறைகளுக்கு அமைய, செய்தி ஆக்கங்கள் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதாகவோ, அச்சுறுத்தலாக அமைவதாகவோ இருக்கக் கூடாது என்பதில் தகுதிவாய்ந்த அதிகாரியை திருப்திப்படுத்த வேண்டும்.

தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் ஆர்வம்; பொது ஒழுங்கைப் பேணுதல், சமூகவாழ்க்கைக்கு வேண்டிய தேவைகளை வழங்குதல், கலகங்களுக்கு அல்லது வன்முறைகளுக்கு மக்களைத் தூண்டும் அம்சங்கள் என்பன இந்த அறிக்கைகளுக்குள் அடங்குகின்றன -

என்று தகுதிவாய்ந்த அதிகாரி தெரிவித்தார். (அ-7)

## அரசின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

அரசின் உத்தேச தீர்வுத் திட்டம் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளமுடியாதது என்ற பகிரங்க அறிக்கை ஒன்றை புளொட் தவிர்ந்த - இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஏனைய கட்சிகள் இன்று கூட்டாக வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## ஜனாதிபதியுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜீ.எல்.பீரிஸ், இந்திக குணவர்த்தன ஆகியோர் கூட்டணித் தூதுக் குழுவுடன் பேச்சு நடத்தினர். கடைசி அரையமணிநேரப் பேச்சுக்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கலந்துகொண்டார்.

தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு ஒத்துழைப்புத் தரும்படி ஜனாதிபதி கூட்டணித் தூதுக் குழுவை வேண்டியதாகத் தெரிகின்றது.

"தமிழர் சார்பாகத் தயாரிக்கப்படாத - தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளைத் தீர்க்காத - உத்தேசத் தீர்வுத் திட்டத்தை ஏற்கமுடியாது; அதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது. தற்போதைய வடிவத்தில் அதை ஏற்பதற்கு இடமேயில்லை." - என்று கூட்டணித் தரப்பில் திட்டவட்டமாகப் பதிலளிக்கப்பட்டதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எனவே ஐ.தே.கட்சியுடன் மீண்டும் ஒரு தடவை பேச்சு நடத்தி, தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய வடிவத்துக்கு தீர்வுத் திட்டத்தை மாற்ற முயற்சி எடுங்கள் என்று கூட்டணிக் குழு ஜனாதிபதியைக் கோரியது.

விடுதலைப் புலிகள் பங்குபற்றாத இடைக்கால நிர்வாகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பங்குபற்றாது என்று இச்சந்திப்பின் போது கூட்டணித் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கூறிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கூட்டணி வடக்கிலும் போட்டியிடும்

கொழும்பு,ஜூலை14

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றால் கடந்த தேர்தல் போன்று அல்லாமல் இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கிலும் போட்டியிடும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## 7,500 பேருக்கு எய்ட்ஸ்!

இலங்கையில் சுமார் 7ஆயிரத்து ஐந்நூறு பேர் எச்.ஐ.வி. (எய்ட்ஸ்) தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என்று எய்ட்ஸ் தடுப்பு அமைப்பின் பணிப்பாளர் டாக்டர் இயந்தி அபேவிக்கிரம நேற்று கொழும்பில் பொது வைபவம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

## வன்னி மாவட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறு ஒழுங்குபடுத்தப்பட்டபோது இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்படும் 196 எம்.பிக்களின் எண்ணிக்கை மாவட்டம் தோறும் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கை அடிப்படையில் மாவட்டங்களுக்குப் பகிரப்படுவது தெரிந்ததே. (உ)

## பயணிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலில் பயணம் செய்ய இடமளிக்கப்படும் என்றும் -

அத்தகையோர் பயண மற்றும் உணவு ஏற்பாடுகளுடன் ஞாயிற்றுக் கிழமை காலை ஏழு மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலய மைதானத்துக்கு வருகைதரவேண்டும் என்றும் -

யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கப்பலில் பயணம் செய்யவுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான ரிக்கெட்டுக்கள் நேற்று சிவில் நிர்வாக அலுவலக அதிகாரிகளினால் பல்கலைக்கழகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (உ-இ-9)


கணக்கீடு

D. முகுந்தன் B.B.A. (Hons.)

A/L 2001

உற்பத்திக் கணக்கு

A/L 2002

தனிவியாபார முழவுக் கணக்கு

பொருளியற் கல்லூரி – யாழ்ப்பாணம்

பொருளியற் கல்லூரி – இணுவில்

BARATHY – சித்தன்கேணி

மூன்று நிறுவனங்களிலும் ஆரம்பம் 15–07–2000 அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(76462)



NIRU

TUITION CENTRE

Kondavil.

இரசாயனவியல்

A/L 2001

சேதன இரசாயனம்

ORGANIC CHEMISTRY

ஆரம்பம்: 15–07–2000

சனிக்கிழமை 4.30

ஆசிரியர்:

திரு. N.மகேஸ்வரன்

(76468)



SUBRA (14)

சித்தன்கேணி

கிறிஸ்தவம்

By : வசந்தன்

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டது.

சனி, ஞாயிறு

2002 3.00 - 4.00

2001 4.00 - 5.00

புவியியல் வகுப்புகள் நடைபெறுகின்றன.

சனி, ஞாயிறு

2002 1.00 - 3.00

2001 11.00 - 1.00

(76466)



பிரமிட் வீடியோ CD வெளியீடு

அஜித் – மம்முட்டி

கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்

வீடியோ விஷன்

யாழ்ப்பாணம்.

(C/12211)



BARATHY

சித்தன்கேணி

6 தொடக்கம் 11வரை

திறமையும் தனித்துவமும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

விஞ்ஞானம் – திரு. தேவா

திரு. பாலச்சந்திரன்

கணிதம் – திரு. S.சிவரூபன்

திரு. சிவா

தமிழ் – திரு. சின்னத்தம்பி

திரு. தவரட்ணம்

சமூகக்கல்வி – திரு. ஜெகன்

ஆங்கிலம் – திரு. வாகீசர்

திரு. அருமைநாயகம்

வர்த்தகம் – திரு. யோகேஸ்வரன்

சமயம் – திரு. T.N. தரன்

தரம் 10

தமிழ் இலக்கியம்

By: சின்னத்தம்பி

சகல பிரிவுகளுக்கும் புதிய அனுமதிகள் 15-07-2000இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

O/L DAY CLASS

திங்கள் முதல் வெள்ளி வரை நடைபெறுகின்றன.

(76375)



கலைவாணி கல்வி நிலையம்

கோப்பாய்

A/L 2001, 2002

புதிய கலைப் பிரிவு வகுப்புகள்

ஆரம்பம்: 17-07-2000 3.30 மணி

- தமிழ் – பண்டிதர் V.M.லிங்கம்
- இந்துநாகரிகம் – திரு. சுரேன்
- அளவையியல் – செல்வி S.சசிகலா
- பொது அறிவு – திரு. I.S.ஜெகன்

குறிப்பு:- இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு சலுகைக் கட்டணம் உண்டு.

– நிர்வாகி

(C/12212)



மீண்டும்

மகாநதி புடைவையகத்தின் பிளவுஸ் பீஸ் காட்சியறை அதே இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதனை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகிறோம்.

இல.16, நவீனசந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

(C/12194)


## பொதுக்கூட்டம்

### வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் யாழ். மாவட்டம்

விடயம்:- புதிய தலைவர் தெரிவும் ஏனைய வேலை வாய்ப்பு விடயங்களும்

இடம்:- D.M.I. கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.

காலம்:- 16–07–2000

நேரம்:- 11.00 மணி

குறிப்பு:- 96,97 ஆண்டு பட்டதாரிகள் வரவு செலவுத் திட்டப்பணியகத்தினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் இலக்கத்துடன் சமுகமளிக்கவும்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், யாழ். மாவட்டம்.

(76469)


மீண்டும் அதே இடத்தில்

வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்

ஓடியோ CD யிலிருந்து புதிய தொழில்நுட்பத்தில் பாடல்களைப் பதிவுசெய்து கொள்வதற்கும், வீடியோ CD திரைப்படப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கும்

வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்

இல.297, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனங்கள்:-

※ மாக்கற், சங்கானை.

※ 612/4, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(76474)


## 31ஆம் நாள் நெஞ்சகலா நினைவுகளும் நன்றி நவிலலும்

மண்ணுக்கு 12 - 10 - 1916



விண்ணுக்கு 14 - 06 - 2000

### திருமதி யோகம்மா கந்தையா

(இயற்றாலை, வரணி)

எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு ஆறுதலளித்த அனைவருக்கும், அஞ்சலிகள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவியும் ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (15-07-2000) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* இடம்பெயர்வு காரணமாக தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

பிள்ளைகள்:

திருமதி இ.தங்கேஸ்வரி (வரணி)

திரு. க.சந்திரசேகரமுதலி (கனடா)

திருமதி ந.தங்கலஷ்மி (கனடா)

திருமதி ச.தங்கராணி (கனடா)

தற்போதைய முகவரி:

திருமதி இ.தங்கேஸ்வரி, குடவத்தை பிள்ளையார் கோயிலடி முன் ஒழுங்கை, துன்னாலை.

(C/12206)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.